விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 20 புதன்கிழமை (04.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 016

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்து

# காணாமல் போனோர் பற்றி எவ்வித தகவலும் இல்லை!

## நீதிமன்றில் இராணுவ அதிகாரி பல்டி



(முல்லைத்தீவு)

**வன்னியில் நடந்த இறுதி யுத்தம் முடிவடைந்த போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போனவர்கள் தொடர்பில் தகவல் தெரியும் என முன்பு நீதிமன்றில் சாட்சியம் அளித்த இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையில் அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்திருக்கின்றார்.**

அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களில் ஒருவராகிய நடேசு முரளிதரன், அவருடைய மனைவி ஜெயக்குமாரி, அவர்களுடைய ஐந்து வயதான தாருஷன், இரண்டு வயதான அபித்தா ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காணாமல் போயிருப்பது தொடர்பான விசாரணை முல்லைத்தீவு நீதிமன்றத்தில், நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த விசாரணையின்போது சாட்

24ஆம் பக்கம் பார்க்க....

## இருவரை தாக்கிய நால்வர் சரண்

(யாழ்ப்பாணம்)

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு அருகில் கடந்த டிசம்பர் மாதம் 25ஆம் திகதி, இரண்டு பேரை இரும்பு கம்பியால் குத்தி படுகாயமடையச் செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் நால்வர், நேற்று சரணடைந்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஐவர் தேடப்பட்டு வரும் நிலையில் அவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## நல்லிணக்க செயலணியின் அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பு

(கொழும்பு)

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கை அரசாங்கத்திடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நல்லிணக்க செயலணியின் பணிப்பாளர் மனோரி முத்தெட்டுவேகம, செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி குறித்த அறிக்கை, ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருந்த நிலையில் அது பிற்போடப்பட்டதாக அந்த செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்திருந்தார்.

குறித்த செயலணியின் மக்கள் கருத்தறியும் குழுவின் 500 பக்கங்களைக் கொண்ட அறிக்கையே நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கைளிப்பதில் காலதாமதம்

24ஆம் பக்கம் பார்க்க....

## மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் ஆபத்தாக முடியும்

(கொழும்பு)


பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைக்குக் கொடுத்தால் நாட்டின் பாதுகாப்பை இராணுவத்தால் மாத்திரம் நிலை நிறுத்த முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட விமல், பொலிஸ் என்பது தேசிய சொத்தாக இருக்க வேண்டும். தற்போது வரை தமிழீழ விடுதலைக்கு புலிகளை வைத்து தென்னிந்தியாவில் அரசியல் செய்ய

23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் பைஸர்க்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை!

### பொது எதிரணி அறிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச் சர் பைஸர் முஸ்தபா தேர்தல்களை தொடர்ந்தும் காலதாமதப்படுத்துவதால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வரவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றி

23ஆம் பக்கம் பார்க்க....

## இந்து ஆலயங்கள் மீது மீண்டும் தாக்குதல்கள்

(திருகோணமலை)

அடையாளந் தெரியாத நபர்களினால் கிழக்கில் உள்ள இந்து ஆலயமொன்றின் விக்கிரகம் தூக்கி வீசப்பட்டதுடன் மற்றுமோர் ஆலயத்தின் கோபுர கலசமும் சேதமாக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நிலாவெளி பகுதியிலுள்ள கூழாவடி பிள்ளையார் ஆலயம் மற்றும் பத்தினி அம்மன் ஆலயம் ஆகியவற்றின் மீது இத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளது.

கூழாவடி பிள்ளையார் ஆலயத்தில் மூலஸ்தானத்திலிருந்த பிள்

24ஆம் பக்கம் பார்க்க....

## பேருந்தில் அடாவடி; மூவர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

பேருந்து பயணத்தின்போது அடாவடித்தனம் புரிந்த குற்றச்சாட்டில் தாக்குதலை நடத்திய இருவர் உட்பட தாக்குதலுக்குள்ளான ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், நேற்றுமுன்தினம்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்

(குருமன்காடு)

வவுனியா வைத்தியசாலையில் பெண்ணொருவருக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளை பிரசவத்திருந்த நிலையில் அவை போதிய நிறையின்மை காரணமாக அடுத்தடுத்து உயிரிழந்துள்ளன.

வவுனியா பொது வைத்தியசாலையில் புத்தாண்டு தினமான கடந்த முதலாம் திகதி பெண் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் யாழ்.விஜயம் திடீரென இடை நிறுத்தம்

### இன்றைய நிகழ்வுகள் பல பிற்போடப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யாழ்ப்பாணத்திற்கான இன்றைய விஜயம் திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணம் எதுவும் உடனடியாக அறிவிக்கப்படவில்லை. ஜனாதிபதி இன்றைய தினம் வருகை தந்து முக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளதாக முன்னா அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில் அந் நிகழ்வுகளை தற்போது பிற்போடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்படி காலை 10.30 மணிக்கு பலாலி வடக்கில் இடம்பெறும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் இதன்போது ஜனாதிபதியுடன்

24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த-மைத்திரி இடையே இரகசிய உடன்பாடு இல்லை!

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எவ்வித தொடர்போ உடன்பாடோ கிடையாது என தெரிவித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண மக்களி



23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


## வரவேற்று வாழ்த்துகின்றோம்

திரு.
**பங்கராஸ் ஜோயல் பியசீலன்**
(SLPS - III)

சேவைதனில் ஏற்றம் பெற்று
ஆற்றவல்ல பணிகள் புரிய
நாட்டமுடன் நாடி வந்த
முதல்வரே! உங்கள் வரவு;
நல்வர வாகட்டும்:
தேவையுள்ள சேவை செய்து
வெற்றிப்படிகள் தாண்டி உயர்வு
கண்டு பணியில் என்றும் வாழ்க

நிறைவான மனதோடு வாழ்த்தும்:-
**கிளி/இராமகிருஸ்ண வித்தியாலய சமூகத்தினர்**

(C-7079)

# ஒரு தொகுதி சாராயம் மீட்பு



வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி வாகனமொன்றில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப் பட்ட ஒரு தொகுதி சாராயம் மாங்குளம் பொலிஸாரால் நேற்று மாலை மீட் கப்பட்டது.

அனுமதிப்பத்திர மின்றிவாகனமொன் றில் மறைத்து எடுத் துச் செல்லப்பட்ட அரச முத்திரை பொறிக்கப்பட்ட 750 மில்லிலீற்றர் அளவுடைய 84 போத்தல்களும் 180 மில்லிலீற்றர் அளவுடைய 64 போத்தல்களும் தென்னம் சாரா யம் 4 மற்றும் புகைசவாரி (Bule safari) ஆகியவையே கைப்பற்றப் பட்டுள்ளது.

வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த மாங்குளம் பொலிஸார் குறித்த வாகனத்தை மறித்து சோதனையிட்டபோது மேற்குறித்த சாராய வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் வாகனத்துடன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரை மீட்கப்பட்ட பொருட்களுடன் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (செ-281)


## Vacancy announcement

**A well-established higher educational institute at Chankanai, seeks suitable persons to fill the vacancies very immediately.**

*Freshers and experienced are welcome.*

1. **Branch Manager** *(With recognized degree or HND in the field of IT or Management.)*
2. **Lecturer / Tutor** *(HND or any other higher qualifications in IT)*
3. **Assistant Lecturer /Tutor** – Part time *(Able to teach Programing Languages, Web designing, Computer hardware and Network technology.)*
4. **Teacher cum student counselor** *(Females only. A/L qualified with good English.)*

**Send us your application & CV with the detail of two non-related referees with passport size photograph. Apply before 9 th of January via e-mail. Only short listed candidates will be contacted.**

*For all positions, English Language proficiency is highly expected.*

e - mail : aiconcity@yahoo.com

(C-7073)



## aat புதிய பிரிவுகள்

க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றி பெறுபேறுகள் கிடைக்கும் வரையான காலத்தில் கணக்கியல் தொழில் சார் தகைமையாளராகவும் இன்னும் பல நன்மைகள் நிறைந்த

aat கற்கைநெறி ஆரம்பம்...
ஜனவரி 15 வரை பதிவுகள்
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு



077 078 2326

(C-7075)


# மரண அறிவித்தல்




## சதீஸ்வரன் சுதாயினி

மண்ணில் 1985 - 06 - 15 விண்ணில் 2017 - 01 - 02

## சதீஸ்வரன் டினோயன்

மண்ணில் 2010 - 12 - 27 விண்ணில் 2017 - 01 - 02



மணவாளன் பட்டமுறிப்பை பிறப்பிடமாகவும் கற்சிலை மடுவை வசிப்பிடமாகவும் பண்டாரிக்குளம் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சதீஸ்வரனின் அன்பு மனைவி சுதாயினியும் மற்றும் சதீஸ்வரனின் பாசமிகு மகன் டினோயனும் 02.01.2017 அன்று அகால மரணமாகினர்.

அன்னார்கள் கா. சிவராசா-கமலகுமாரி தம்பதியரின் மகளும் பேரனும் பண்டிக்கேய்தகுளத்தை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி அகிலாண்டநாயகி ஆகியோரின் மருமகளும் பேரனும் ஆவர்.

இவர் சிவாகரன் (அவுஸ்திரேலியா), சிவாயினி (பண்டாரிக் குளம்), சுதர்சன் (அவுஸ்திரேலியா), சுதாகரன் (கொமசல் கிரடிற், வவுனியா), கமலாயினி (பண்டாரிக்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகனும் மருமகனும் ஆவர்.

சதீஸ்வரன் (ஆசிரியர் - கிடாச்சூரி அ.த.க.பாடசாலை), மயூரன் (கனடா) மைத்துனியும் பெறாமகனும் ஆவார்.

இவர்களது இறுதி ஈமக்கிரியைகள் 27/3C, 4ம் ஒழுங்கை, பண்டாரிக்குளத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் 05.01.2017 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**27/3C, 4ம் ஒழுங்கை, பண்டாரிக்குளம் வவுனியா.**

தொலைபேசி இல.
**சகோதரன் - 077 515 9469**
**மைத்துனர் - 077 772 2967**
**கணவர் - 077 552 8304**

தகவல்:-
**குடும்பத்தினர்**

(C-7080)

# அரச சேவையில் இடமாற்றம் தவிர்க்கப்பட முடியாத ஒன்று

## வடக்கு சுகாதார அமைச்சு விளக்கம்

அரச சேவையில் இடமாற்றம் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். இதில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மட்டும் விதி விலக்காக முடியாது என வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் விளக்கமளித்துள்ளார்.

சேவைக்குச் சேரும் போது நாட்டின் எந்தப் பாகத்திலும் கடமையாற்றச் சம்மதம் என உறுதியளித்து சேவையில் சேர்பவர்கள் வெளி மாவட்டம் ஒன்றுக்கு இடமாற்றப்படும் போது அது எவ்வாறு பழி வாங்கலாகும் என்பது புரியவில்லை. இச் சேவைக்கான ஆளணி எல்லா மாவட்டங்களிலும் காணப்படும்போது அதிகமான பொது சுகாதார பரிசோதகர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக உள்ள சூழ்நிலையில் சில அலுவலர்கள் சிலகாலமாவது வெளி மாவட்டத்தில் பணியாற்ற வேண்டியது அவசியமானதே.

வெளிமாவட்டத்தில் நீண்ட காலம் பணியாற்றுவோர் சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம் கோரும் பட்சத்தில் வெளி மாவட்டங்களில் பணிகள் பாதிக்கப்படாமல் அவர்களுக்கு நீதி வழங்க வேண்டியதும் அமைச்சின் பொறுப்பாகும். இதற்காக தொடர்ச்சியாக சொந்த மாவட்டங்களில் கூடிய காலம் கடமையாற்றியவர்களுக்கு வெளி மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டும்.

மேற்படி சங்கம் குறிப்பிடுவது போலன்றி அலுவலர்களின் முன்னுரிமைகளை விட மக்களுக்கு அவசியமான இடங்களிலேயே சேவை வழங்கப்படல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உண்மையில் தாபனக் கோவை விதிகளுக்கு மாறான இடமாற்றம் என இச்சங்கம் கருதுமாயின் அவர்களுக்கான மேன்முறையீடுகளைச் செய்து நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் திறந்தே உள்ளன. சட்ட ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பொறுப்புடையவர்கள் அனைவரது அங்கீகாரமும் பெற்றே இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இது தனிப்பட்ட முறையில் செயலாளரின் முடிவு எனக் கருதப்படுவதற்கு இடமில்லை.

இடமாற்றத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படுபவர்களின் மேன்முறையீட்டை ஆராய்வதற்காக அழைக்கப்பட்ட போதும் சங்கம் அதனை நிராகரித்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதானது டெங்கு மற்றும் தொற்றுநோய்கள் பரவக்கூடிய இக்கால கட்டத்தில் மக்கள் விரோத நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும் எனவும் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் சுட்டிக் காட்டியுள்ளார். (இ

# வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகளை பாதுகாக்க படையினரின் உதவியுடன் திட்டம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

மூன்று தசாப்தகால யுத்தத்தின் காரணமாக அழிவடைந்துள்ள வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முப்படையினரின் பங்களிப்புடன் ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் அபிவிருத்திக்கு நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பௌத்த விஹாரைகள் உள்ளிட்ட தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களைப் பாதுகாப்பதற்கு சிவில் பாதுகாப்பு படையினரின் பங்களிப்புடன் ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டத்தை இவ்வருடம் முதல் ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி இங்கு மேலும் தெரிவித்தார்.

மேலும், பௌத்த சாசனத்தின் மேம்பாட்டுக்காக அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி இலங்கை தாய்நாட்டை ஒரு சிறந்த நாடாகக் கட்டியெழுப்புவதற்கு மகா சங்கத்தினர் வழங்கும் தலைமைத்துவத்தை நினைவு கூர்ந்தார்.

இந்நிகழ்வில் குறைந்த வசதிகளையுடைய விஹாரைகளின் அபிவிருத்திக்கு பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தின் கீழ் 107 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது.

இத்தேபானே தம்மாலங்கார தேரர், கொட்டுகொட தம்மாவாச தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரும் சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-3)

# பிரதமரால் விரட்டப்பட்டவர் ஜனாதிபதியால் இணைப்பு

முனனாள் காணி ஆணையாளர் ஆர்.பீ.ஆர். ராஜபக்ஷவை, பாதுகாப்பு அமைச்சின் காணி மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் மேலதிக செயலாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

அவர் நேற்று கடமையை பொறுப்பேற்றுள்ளார்.

ஆர்.பீ.ஆர்.ராஜபக்ஷ காணி ஆணையாளராக செயற்பட்ட சந்தர்ப்பத்தில் தனது கடமையை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிங்க ஜயவர்தன மற்றும் சமிந்த விஜேசிறியினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனால் பிரதமரின் ஆலோசனைக்கமைய சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவினால், காணி ஆணையாளரிடம் மேற்கொண்ட அழுத்தம் காரணமாக ராஜபக்ஷவை, அந்த பதவியில் இருந்து இராஜினாமா செய்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# நிதிமோசடி விசாரணை பிரிவின் பணிப்பாளர் திடீர் இடமாற்றம்!

(கொழும்பு)

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சீ.எ.பிரேமசாந்த பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரேமசாந்த, பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டு மொனராகலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பவித்ர தயாரத்ன, நிதிமோசடி விசாரணை பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சீ.எ.பிரேமசாந்த, பிரதி பொலிஸ்மா அதிபராக தனது பதவியை கடந்த மாதம் 29 ஆம் திகதி மொனராகலையில் வைத்து பொறுப்பேற்றுக் கொண்டார். (இ-3)

# 5ஆயிரம் ரூபாய் கப்பம் கோரி காசாளரை தாக்கிய குழுவினர்

மாத்தறை பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் காசாளர் ஒருவர் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

மாத்தறை பேருநது நிலையத்திற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையத்திலேயே நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பலர் அடங்கிய குழுவினர் குறித்த வர்த்தக நிலையத்திற்கு வருகை தந்து காசாளரை கடுமையாக தாக்கியுள்ள னர.

5 ஆயிரம் ரூபா கப்பம் கோரியே குறித்த குழுவினர் காசாளரை தாக்கியுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பான காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவிவருகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

# நல்லாட்சி அரசிற்கு எதிராக வீதியிலிறங்கிப் போராட்டம்

## ஜே.வி.பி. தீர்மானம்



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் திருகோணமலை எண்ணெய் குதங்கள் என்பவற்றை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கின்ற நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடுவதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

ராஜபக்ஷ அரசாங்கம் நிரமாணப் பணிகளில் கொளளையிட்டது போன்று நல்லாட்சி அரசாங்கம் சொத்து விற்பனைகளில் கொள்ளையிட்டு வருவதாக ஜே.வி.பி யின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக்காலை பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அநுர குமார திஸாநாயக்க "அம்பாந்தோட்டை துறைமுகப் பகுதியை சீனாவிற்கு விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் 8ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபாலவின் பொலநறுவை இடத்தையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சொந்தமான கொள்ளுப்பிட்டியிலுள்ள காணியல்ல, பொதுச் சொத்துக்களே விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். முன்னைய அரசாங்கம் நிர்மாணிப்பதில் கொள்ளையிட்டது. நல்லாட்சி அரசாங்கம் விற்பனை செய்கிறதில் கொள்ளையிடுகின்றது. அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் விற்பனை, கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதி இந்தியாவிற்கு விற்பனை, புல்மோட்டை கனியவளம் விற்பனை, திருகோணமலையில் 15 எண்ணெய் குதங்கள் சீனாவிற்கு விற்பனை என்பவற்றை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் திருகோணமலை எண்ணெய குதங்களை பார்ப்பதற்கு சென்றபோது இந்தியன் எண்ணெய் நிறுவனத்தினால் கைது செய்யப்படுகின்றனர். சரியான ஓர் அரசாங்கமாக இருந்தால் அந்த இந்திய நிறுவனத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டு அந்த எண்ணெய் குதங்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டும். அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாட்டிற்கு எதிராக இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளோம். இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக நாளைய தினம் புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவுள்ளோம். அம்பாந்தோட்டையில் எதிர்வரும் 5ஆம் திகதியும், 15ஆம் திகதி கொழும்பு துறைமுகப் பகுதியிலும் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதிக்கே முதலில் ஆபத்து

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்தால் எம்மை விட முதலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கே ஆபத்து என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வில்பத்து விவகாரம் தொடர்பான முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் அவர் மேலும் கருத்து தெரிவிகையில்,

ஜனாதிபக்கு நன்றாகத் தெரியும் மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் முதலில் அவருக்கே ஆபத்து என்றும் அவரை ஜனாதிபதியாக்குவதற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்ததென்றும் அவர் எம்மை விட நன்கறிந்து வைத்துள்ளார்.

எனக்கு நம்பிக்கை இருக்கிறது 2020 வரை இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. மேலும் கடந்த ஆட்சியில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு சமூகப்பிரச்சினைகளுக்கு ஒன்றாக இணைந்து குரல் கொடுக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றாலும் ஜனநாயக நாட்டில் இப்போது அதனை செய்ய முடிகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி பாராளுமன்றத்தில் முஸ்லிம்களுக்காக 21 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் மீண்டும் ஒன்றிணைவது எமது ஒற்றுமையை மேலும் பலப்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
## பொது அறிவித்தல் - 2017

உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும், எமது சபையால் நடைமுறைப் படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.


| இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1. | ஆதன வரி செலுத்துதல் | 2017ம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை) மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்), பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்) பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்த காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். |
| 2. | ஆதனப் பெயர்மாற்றம் செய்தல் | எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடைமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். |
| 3. | கட்டிட அனுமதி வழங்கல் | 1. பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள், போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.<br>2. ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.<br>3. அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து குடியமர்வுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும்.<br>4. சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள் குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலை கள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும். |
| 4. | வீதி ஒழுங்கைப் பேணல் | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இரு மருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள், மற்றும் புல்பூண்டுகள், அலங்கார சீமெந்துக் கட்டுக்கள் போன்றவற்றை அகற்றி துப்புரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.<br>அத்துடன் எமது பிரதேசத்தில் அதிகரித்த வாகனப்போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப்பேணும் சைகை குறியீட்டுப்பலகை முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| 5. | சூழல் பாதுகாப்பு உரிமம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 1980 ஆம் ஆண்டின் 47ம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் எனக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ம் திகதிய மற்றும் 1534 /18 இலக்க 2008.02.01 ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும்; ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக்கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்டநடவடிக்கை மேற் கொள்ளப் படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 6. | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | 2017 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை பங்குனிமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 7. | வியாபார அனுமதிப் பத்திரம் - 2017 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், ஆட்டோத்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருள்களை விநியோகிப்போர் 2017 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை2017 ஆம் ஆண்டு ஜனவரி 31 ம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2017 ஆம் திகதிக்குள் செலுத்தி 2017 ஆம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 8. | படவரைஞர்களைப் பதிவு செய்தல் | 2017 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும்2017 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும். |
| 9. | விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல் | வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2017 ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன. இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2017ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| 10. | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | வீடுகள் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்/ கழிவுப் பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில் புதைத்தோ எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்றமுடியாதுள்ள கழிவுப்பொருட்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 11. | நீர்வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியும் |
| 12. | கனரக வாகன சேவை | மலக்கழிவு மற்றும் திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (கலி பௌசர்) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். வீதி உருளை வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 13. | கலாசார மண்டபம் மற்றும் விளையாட்டு மைதானம் | பொதுமக்கள் மற்றும் வியாபார , அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் |
| 14. | பொதுப்பயன்பாட்டு சேவைகள் | எமது சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள் , ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலை என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கிவருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாக பெற்று பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் |
| 15. | மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனப்பட்டியல் மக்கள் பார்வைக்கு விடுதல் | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 141 முதல் 146 வரையான பிரிவுகளுக்கு அமைவாக வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம எல்லையினுள் அமைந்துள்ள மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்களின் பட்டியல் மானிப்பாய் கிராம உபஅலுவலகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்களினை சம்மந்தப்பட்டவர்கள் பார்வையிட்டு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் எதிர்வரும் 2017.01.31 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் |

கட்டண விபரப்பட்டியலை உப அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்

04.01.2017

திரு கு. சற்குணராசா,
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
தொலைபேசி இல : 0213734341,0212255381

(C - 7074)






வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் அமைக்கப்பட்ட அறிவொளி முன்பள்ளி அலுவலகத்தை அனந்தி சசிதரன் திறந்து வைப்பதையும், அறிவொளி சனசமூக நிலையத்தின் ஐம்பதாவது வருடநிறைவை முன்னிட்டு நடைபெற்ற அறிவொளி முன்பள்ளி சிறார்களின் கலைவிழா நிகழ்வின் போது, நிலையம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சகலபொறுப்புகளிலும் பணியாற்றிய தற்போதைய தலைவர் க.தம்பிராசாவைப் பாராட்டி, சமூகப்பற்றாளர் ச.பாலசுப்பிரமணியம் கௌரவப்பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## ரபாடா, பிளாண்டர் வேகத்தில் சுருண்டது இலங்கை அணி

தென்னாபிரிக்கா அணியின ரபாடா, பிளாண்டர் ஆகியோரின் வேகத்தில் இலங்கை அணி முதல் இனிங்சில் 110 ரன்னில் சுருண்டது.



தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி கேப் டவுனில் நேற்று முனதினம் தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத் தடுப்பை செய்தது.


அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி டீன் எல்கர் (129), டி காக் (101) ஆகியோரின் அபார சதத்தால் 392 ரன்கள் குவித்தது. இலங்கை அணி சார்பில் குமாரா 6 விக்கெட்டுக்கள் குவித்தார்.

அதன்பின் இலங்கை அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தை தென்னாபிரிக்கா பந்து வீச்சாளர்கள் சரியாக பயன்படுத்திக் கொண்டு, இலங்கை பட்ஸ்மேன்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தினார்கள்.

இதனால் இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் மளமள வென சரிந்தது. தொடக்க வீரராக களம் இறங்கிய கருணாரத்னே 24 ரன்னும், 7-வது வீரராக களம் இறங்கிய உபுல் தரங்கா அவுட்டாகாமல் 26 ரன்னும் எடுத்தனர். மற்றவர்களும் சொற்ப ரன்களில் ஆட்டம் இழக்க, இலங்கை அணி 110 ரன்னில் சுருண்டது.

பிளாண்டர், ரபாடா ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள். இலங்கை அணி 282 ரன்கள் பின்தங்கியதால் பாலோ - ஆன் ஆனது. ஆனால் தென்னாபிரிக்கா அணி பாலோ - ஆன் கொடுக்காமல் தொடர்ந்து 2-வது இன்னிங்சை தொடங்கியது.

நேற்றைய நாள் முடிவில் தென்னாபிரிக்கா 11 ஓவர்களில் 35 ஓட்டங்கள் குவித்துள்ளது போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)



# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

### வாழ்த்துச் செய்தி



திரு.வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்கள் 13 வருடங்கள் ஆசிரியராகவும் 26 வருடங்கள் அதிபராகவும் பணியாற்றி இளைப்பாறியுள்ளார். அவரின் சேவைநலன் பாராட்டு விழாவிலே வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வடபுலத்தின் கல்விப்பணியிலே இவருடைய பங்கு மிகக் காத்திரமானது. யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த ஆரம்பப் பாடசாலையான யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் 12 ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றினார். இலங்கைக் கல்வி வரலாற்றில் இப்பாடசாலை புலமைப்பரிசில் பரீட்சையில் அதியுயர் பெறுபேறுகளைப் பதிவாக்கியிருக்கின்றமை ஒரு முக்கிய விடயமாகும். இதனைவிட யாழ்ப்பாணத்தில் பிரபலமான பாடசாலைகளான யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றினார்.

கல்வித்துறையில் மட்டுமல்லாமல் பொதுச்சேவையிலும் யாழ்ப்பாணச் சமூகத்திற்காக இவர் பணியாற்றியிருக்கின்றார். இவ்வாறு ஆசிரியராக, ஒரு அதிபராக, நல்லதொரு கல்விமானாக மிளிர்ந்து இந்தச் சமூகத்திற்கு பணியாற்றிவிட்டு ஓய்வுபெறுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அவரை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**த.குருகுலராசா, அமைச்சர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாண சபை.**

### வாழ்த்துச் செய்தி



யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி 60 வயதைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு.வே.ஞானகாந்தன் அவர்களின் கல்விச் சேவையை வாழ்த்தி நடத்தப்படும் மணிவிழாவில் வெளியிடப்படவிருக்கும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

39 வருட காலத்திற்கு மேலாக ஆசிரியராக, அதிபராக, படிப்படியாகத் தர உயர்வு பெற்று மாணவர் சமுதாயத்துக்கு அர்ப்பணிப்புமிக்க சேவையினை வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கதாகும். தனது அயராத முயற்சியின் காரணமாக 1991 இல் ஆசிரிய சேவையிலிருந்து இலங்கை அதிபர் சேவைக்கு தரமுயர்த்தப்பட்டார். சிறந்த ஆளுமையையும் தலைமைத்துவத்தையும் கொண்ட அவர் தான் பணியாற்றிய பாடசாலைகளில் கல்விப் பணிக்குப் பெரும் பங்காற்றியிருந்தார். அத்துடன் தனது சேவைக்காலத்தில் பல சமூக, சமயப் பணிகளை ஆற்றியுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இவர் தனது ஓய்வுக்காலத்தில் பல சமூக, சமய பணிகளைப் மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.இரவீந்திரன், செயலாளர், கல்வி,**
**பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

### அதிபர்களில் மாணிக்கம்



முன்னுதாரணமான அதிபராக-ஆசிரியராகக் கல்விப்புலத்தில் 39 அகவைகள் அரும்பணியாற்றி பணி ஓய்வு பெறும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பெருமதிப்புக்குரிய திரு.வே.ஞானகாந்த்ன் அவர்கட்கு மணிவிழா வாழ்த்துரைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

கல்விப் புலமையும் நிர்வாகத் திறனும் நல்ல தொடர்பாடல் திறனும் மிக்க திரு. வே.ஞானகாந்தன் அவர்கள் தான் பணியாற்றிய இடங்களில் எல்லாம் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர். சக அலுவலகர்களுக்கு என்றும் ஆலோசனையும் உதவிகளும் வழங்கிட்ட நட்பின் சிகரம் அவர். வடபுல கல்வியுலகின் புகழ்பூத்த கல்விச்சாலைகளாகிய யா/இந்து ஆரம்ப பாடசாலை, யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றுடன் நல்லூர் கோட்ட பாடசாலைகள் பலவற்றில் பணியாற்றி அப்பாடசாலைகளின் வளர்ச்சியில் எழுச்சியில் வரலாற்று நாயகனாக விளங்குகின்றார்.

என்னுடைய ஆதர்ச அதிபரும் நண்பருமாகிய மணிவிழா நாயகனை நலமோடு, வளமோடு, புகழோடு நீடு வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகிறேன்.

**எப்.எக்ஸ் அன்ரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**நல்லூர் கல்விக்கோட்டம்.**

### முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி



திருவாளர் ஞானகாந்தன் அவர்கள் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபராக இருந்த காலத்திலிருந்தே எனக்கு அறிமுகமானவராகவும் நண்பராகவும் இருந்து வருகின்றவர். இவரது அகவை அறுபது நிறைவாகும் இன்றைய தினத்தில் நடத்தப்படும் மணிவிழா மகுடமாக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை அலங்கரித்து கல்லூரியை வளர்த்தெடுப்பதில் அரும்பாடுபட்டு மாணவர்களை தேசிய மட்டம் வரையான போட்டிகளில் பங்குபெற செய்தமை என்பன அவரின் சாதனைகளின் சான்றாக அமையும்.

கல்லூரிச் சமூகத்துடன் இவர் கொண்டிருந்த மனிதாபகரமான உறவும் ஆன்மீகச் சிந்தனையும் அமைதியான போக்கும் இவர் பணி சிறக்க வழிவகுத்தன.

இவரது ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் மகிழ்வாக, நலமாக அமைய எல்லாம்வல்ல இறைவனைப்பிறார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**பொ.கமலநாதன்,**
**இளைப்பாறிய அதிபர், யா/கொ.இ.க.**



**உயர்திரு.வேலாயுதபிள்ளை-ஞானகாந்தன்(J.P)**
**(B.A-Dip in Edu,MEd-SLPS-I)**

பிறப்பிடம்-நயினாதீவு
கல்வி-நயினாதீவு மகா வித்தியாலயம்

**ஆசிரியர் சேவை**

வ/பறையனாவங்குளம் அ.த.க.பா-17.03.1978-11.01.1981
வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயம்-12.01.1981-17.01.1982
யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை- 18.01.1982-31.12.1982
வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயம் - 01.01.1984-17.05.1987
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்- 18.05.1987-04.06.1991
ஆசிரியர் ஆலோசகர்-யாழ். கோட்டம்- 05.06.1991-08.10.1992

**அதிபர் சேவை**

யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை- 09.10.1992-11.01.1997
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்- 12.01.1997-26.01.1998
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை- 27.01.1998-15.06.2010
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்-16.06.2010-09.10.2012
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி-10.10.2012-03.01.2017

### ஆரம்பப் பள்ளிகளின் முன்னோடி



கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து மணிவிழாக் காணும் வேலாயுதபிள்ளை ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். மணிவிழா நாயகன் கல்விப் புலத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் 39 வருடங்கள் பணியாற்றியுள்ளார். சிறிய பாடசாலைகள் முதல் பெரிய பாடசாலைகள் வரை அர்ப்பணிப்பான சேவையை வழங்கியுள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேவையாற்றிய காலத்தில் கல்லூரியின்பரீட்சைப்பெறுபேறுகள், இணைபாடவிதானசெயற்பாடுகளில்தொடர்ச்சியாக வளர்ச்சியைப் பதிவு செய்தார். தமிழ் மொழிப்புலமை, விளையாட்டுப் போட்டிகளில் தேசிய மட்ட ரீதியில் பல வீரர்கள் பதக்கங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். தனது செயற்பாடுகளை கல்வித்துறையுடன் மட்டும் நின்றுவிடாது சமூக, கலாசார, சமய நிறுவனங்களுடன் செயலாற்றி வந்ததை அவரது வரலாற்றுப் பதிவுகளில் இருந்து அறிய முடிகின்றது.

இத்தகைய பெருமைக்குரிய மணிவிழா நாயகன் தொடர்ந்து சமூக, கலாசார, சமய துறைகளில் ஈடுபட இறையருளை வேண்டுகின்றேன்.

**அ.அகிலதாஸ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்.கல்வி வலயம்.**

### குடும்பநலத்துடன் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்



மணிவிழா நாயகன் உயர்திரு ஞானகாந்தன் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

தனது கல்விச் சேவைகளை பல முன்னிலை பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி தனது முத்திரையைப் பதித்தவராவார். அதிபர் தரம் I தகைமைகளையும் பல பாடசாலைகளிலும் சேவையாற்றிய அனுபவங்களையும் கொண்ட இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை 2012 ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டார். கொக்குவில் இந்துக் கல்லூரி பிரபல்யமான கல்லூரிகளில் ஒன்றாகும். இக்கல்லூரியை மிகச் சிறப்பாக வழிநடத்திய காலங்களில் இவருக்கு பல சவால்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டாலும் இவரது பொறுமை இவைகளுக்கு முகங்கொடுத்து வெற்றிபெறச் செய்தது.

பிறரை மதிக்கின்ற, நேசிக்கின்ற நல்ல சுபாவம், பதற்றப்படாத தன்மை, பிறர் முகம்கோணாமல் பழகுகின்ற முறை இப்படியான பல குணாதிசயங்களைக் கொண்ட இவர் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டதுடன் சமூக உறவுகளையும் பேணிக்காத்தார். அவர்களின் ஓய்வுநிலை காலங்கள் சீரும் சிறப்புடன் சகல சௌபாக்கியங்களும் அமைந்து குடும்ப நலன்களுடன் வாழவேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவர்கள் ஆற்றிய சேவைகளுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

**அ.பஞ்சலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்)**
**தலைவர், பழைய மாணவர் சங்கம்,**
**நம்பிக்கை நிதியம், கொக்குவில் இந்துக் கல்லூரி.**

### ஆற்றல். மிக்க அதிபர்



கொக்குவில் இந்துவின் அதிபர் திருவாளர் வே.ஞானகாந்தன் அவர்கள் பாடசாலை வரலாற்றில் தனிமுத்திரை பதித்த ஆற்றல் மிக்க அதிபராக விளங்கியவர். மிகவும் இக்கட்டான காலத்தில் பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்று அர்ப்பணிப்புடன் சுவுடிய விடாமுயற்சியினால் பாடசாலை பல வழிகளில் முன்னேற்றமடைய காரணமாக இருந்தார். சீரிய சிந்தனை, தெளிந்த நல்நோக்கு, விசுவாசமான செயற்பாடு, விடா முயற்சி என்பன அவரது சிறப்பம்சங்களாகும். இவர் அதிபராக கொக்குவில் இந்துவில் பதவி வகித்த காலம் போற்றப்பட வேண்டியது. அவர் ஓய்வு பெறுவது எமது பாடசாலைக்கு பேரிழப்பாகும். இருப்பினும் அவரது ஓய்வுக்காலம் இனிமையாகவும் பயனுள்ளதாகவும் அமைய கிருபாகரசுவாமி அருள் பாலிப்பாராக.

**கலாநிதி ச.க.கண்ணதாஸ், செயலாளர் , பாடசாலை**
**அபிவிருத்திக்குழு.**

**வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**கொக்குவில் இந்துக்கல்லூரி,**
**கொக்குவில்.**

(சி-7070)

### ஆசிச்செய்தி



கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு.வே.ஞானகாந்தன் அவர்கள் அகவை 60 இட்டு எமது கல்லூரியில் கடந்த 4 வருடங்களாக பாடசாலையை இந்து சமய விழுமியங்களுடன் கொண்டு சென்றவர். பாடசாலையின் வளர்ச்சியில் தூரநோக்கு சிந்தனை கொண்ட இவர் ஓய்வுபெறும் காலத்தில் குடும்பத்தவர்களுடன் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் ஆசிகள் அவருக்கு கிடைத்தருள வாழ்த்துகிறேன்.

**சிவஸ்ரீ சிவதாசக்குருக்கள், பிரதம குரு, கொக்குவில்**
**அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய் சுவாமிகள்**
**தேவஸ்தானம்.**

### வாழ்த்துச் செய்தி



யா/கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு.வே.ஞானகாந்தன் அவர்கள் அகவை அறுபதில் ஓய்வுபெறுவதையிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

அதிபர் திரு.வே.ஞானகாந்தன் அவர்கள் சிறந்த ஆசிரியராகவும் சிறந்த அதிபராகவும் கல்விப்புலத்தில் சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார். வவுனியா மாவட்டத்தில் ஆசிரிய நியமனத்தினைப் பெற்று மிக நீண்டகாலம் வெளி மாவட்டங்களில் ஆசிரியர் பணியினை ஆற்றி யாழ்.மாவட்டத்தில் ஆசிரியராக, அதிபராக சிறப்பான பாடசாலைகள் அனைத்திலும் அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இப்பாடசாலைகள் கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் உயர்ந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

கலைமாணிப் பட்டதாரியான இவர் கல்வி முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுள்ளதுடன் 13 வருடங்கள் ஆசிரியராகவும் 26 வருடங்கள் அதிபராகவும் கல்விப்புலத்தில் 39 வருடங்கள் அரும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் அவர் தனது ஓய்வுக்காலத்தில் மகிழ்வோடு வாழவும் கல்விப்புலத்திற்கு தனது பணியினைத் தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார், மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்.**

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கல்வித்துறையில் கிட்டத்தட்ட 39 வருடங்கள் பணிபுரிந்து இளைப்பாறும் அதிபர் திரு.வே.ஞானகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

25 வருடங்களுக்கு மேலாக சிறந்த ஓர் அதிபராக பணியாற்றிய பெருமை அவருக்குண்டு. யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சியில் இவரின் பங்கு மகத்தானது. பின்னர் யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் சிறப்பாகப் பணியாற்றியதன் விளைவாக யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். இக் கல்லூரியின் வளர்ச்சியில் ஈடுபாட்டுடன் பணிபுரிந்தார். தான் எதிர்நோக்கிய சவால்களை எதிர்கொண்டு வெற்றியீட்டினார்.

இவரது முகாமைத்துவம் முரண்பாடற்றதாகவும் ஏனையோரை அரவணைத்துச் செல்லும் தன்மையும் கொண்டதாக விளங்கியது. தனது குறிக்கோளில் தெளிவாகஇருந்ததோடு அதனை அடைவதற்காகக் கடுமையாக உழைத்தவர். அவரது திறமையாலும் விடா முயற்சியாலும் கொக்குவில் இந்துக் கல்லூரி கல்விப் பெறுபேறுகளிலும் விளையாட்டுத்துறைகளிலும் ஏனைய துறைகளிலும் பல சாதனைகளை ஈட்டியது. அவரது பொறுமையும் நிதானமும் அவரது பணிக்கு மெருகூட்டின. மாணவர்களினதும் சக ஆசிரியர்களினதும் அன்பைப் பெற்றவர். கல்வித் திணைக்களத்துடன் சிறந்த உறவுகளைப் பேணியதோடு தனது பாடசாலைக்கான தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். கல்வித்துறையில் அயராது பணியாற்றி ஓய்வு பெறும் இவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சியாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ந.தெய்வேந்திரராஜா, வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்.கல்வி வலயம், யாழ்ப்பாணம்.**

### பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



சிறந்த கல்வி அறிவு, ஆளுமை, அஞ்சா நெஞ்சம், எச்செயலையும் நுட்பமாகவும் சரியாகவும் செய்யும் திறன், சக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் சமூகத்தினருடனும் புரிந்துணர்வுடன் கலந்து செயலாற்றும் மனப்பாங்கு இவற்றுடன் அவரிடத்தில் காணப்பெற்ற ஒழுக்க சீலம், தமர் பிறர் என்று பாராத சேவை என்பனவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தேவையான இடத்து கண்டிப்பு ஆகிய பண்புகள் இவரை ஓர் உன்னதமான முகாமையாளராக, கல்லூரியின் அதிபராய், இலட்சியத்தின் வழிகாட்டியாய் பலநூறு சாதனைகளை வலய, மாகாணம், தேசிய மட்டத்தில் உண்டாக்கி கல்லூரிக்கு புகழீட்டியவர் என்னும் மங்காப் பெருமையுடன் இன்று அரச சேவையை நிறைவு செய்கின்றார். அதிபர் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பணிகளைப் போற்றுவதுடன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்படையவும் அவரது சமய, சமூகப்பணிகள் மேலும் சிறப்படையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சொ.லோகேஸ்வரன், பிரதி அதிபர்.**

### ஆளுமை மிக்க அதிபர்



கொக்குவில் இந்துவில் 39 வருடங்களாக ஆசிரியராக, அதிபராக இருந்து மணிவிழா காணும் எமது அதிபர் திருவாளர் வே. ஞானகாந்தன் அவர்களின் சேவை நயப்பில் வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

இவரது சேவைக்காலத்தில் பாடசாலை கல்வி செயற்பாடுகளிலும் இணைபாடவிதானசெயற்பாடுகளிலும் உன்னதநிலையை அடைந்தது. தேசிய நிலை வரையும் பெறுபேறுகளை அடைய செய்த பெருமை இவருக்குரி யது. இன்முகத்துடன் அனைவரையும் அரவணைத்து கல்லூரியின் முன்னேற்றத்துக்கு அயராது உழைத்தவர் என்றால் மிகையா காது. கல்வி செயற் பாடுகளுடன் சமூக சேவைகளிலும் ஆர்வத்துடன்ஈடுபட்டுவருகின்றார். இவரது ஓய்வுக்காலம்சிறப்பாகஅமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திப்பதுடன் விழா நாயகனுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

**M.A. ரூபநாதன், தலைவர்,**
**ஆசிரியர் நலன்புரிக்கழகம், கொ.இ.க.**











கரவெட்டி பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய விழாவும் திருவுடையாள்-06 நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் கரண வாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு பிரதேசசெயலர் நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மகாலிங்கம்)







வட மாகாண மரநடுகை மாதத்தினை முன்னிட்டு கொற்றாவத்தை கலைவாணி சன சமூக நிலையத்தில் மரநடுகை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது கரவெட்டி பிரதேச சபைச் செயலாளர் அ. வினோராஜ் நிலைய செயலாளர் இ. திலீபனுக்கு மரக்கன்று வழங்குவதையும் ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் பி. கிருஷ் ணானந்தன் உரை நிகழ்த்துவதை யும் கரவெட்டி பிரதேச சபை நிர்வாக உத் தியோகத்தர் பா. மணிவண்ணன் ,நிலையத் தலைவர் க. தங்கவேலு ஆகியோர் இணைந்து றேஞ்சல் விளை யாட்டுக்கழக மைதானத்தில் மரக்கன்றுகளை நாட்டுவதையும் படங்களில் காணலாம்.


## உடன் தேவை

கணனியில் தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்யக் கூடிய ஆண், பெண் இருபாலாரும் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். மற்றும் (டிஜிற்றல்) போட்டோ கொப்பி செய்யக்கூடியவர்களும் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இல:- 076 833 8371
(மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்)
No :- 226, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
(யாழ். பல்கலைக்கழக அருகாமை)
(7363)

இப்போது விற்பனையாகிறது!
தரம் 4, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு

# நுண்ணறிவு

ஆக்கம்: M.சுகந்தன் (B.A,Dip.in.Teaching, PGDE)

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பகுதி 1 வினாத்தாளின் முழுமையான பாடப்பரப்புகளை உள்ளடக்கிய நுண்ணறிவு வினாக்களும், விளக்கமான விடைகளும் அடங்கியது.**

இப் புத்தகத்தின் சிறப்புகள்..
- ✓ பாடத்திட்டத்தினை (ஆசிரியர் கைநூல்) அடிப்படையாகக் கொண்டது.
- ✓ ஆரம்பக் கல்வி துறையில் அனுபவமிக்க ஆசிரியரின் கைவண்ணம்.
- ✓ தரமான பயிற்சிகளுடன் மாணவர்கள் இலகுவாக புரிந்துகொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
- ✓ 1000ற்கு மேற்பட்ட வினாக்களுடன் தெளிவான விடைகளுடன்.
- ✓ பரீட்சையில் பகுதி 1 இல் 100 புள்ளிகளை பெற்றுக் கொள்ள வழிகாட்டும் பயிற்சிகள் அடங்கிறது.

விலை: 450/-

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு:- யுனிலாங்காஸ் பப்ளிக்கேஷன்
இல. 10-1/5, முதலாம் மாடி (Trust Complex) ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13. தொ.பே: 077 6258 778
(7074)


# இராசி பலன்

04.01.2017
(மார்கழி 20, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 12.54 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 3.21 மணிவரை
சுபநேரம் 5.01-6.31 மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சுக் செவ் கேது சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம், பூரம் காலை 9 மணிக்கு மீன-சந் | | |
| | | | ராகு |
| சூரி | சனி புத | | குரு |

**மீனம்**
திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தினிடையே முற்கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது.

**மேடம்**
தொழில் ரீதியாக புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்**
அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மிதுனம்**
செய்தொழில் மேன்மையுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கும்பம்**
நண்பர்களால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கடகம்**
வெறுத்து ஒதுக்கிய சிலரே உங்களிடம் விரும்பி வந்து சேரலாம், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.

**மகரம்**
சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

**தனுசு**
எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.


**விருச்சிகம்**
தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**
தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**கன்னி**
குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கை யுண்டு.

# முஸ்லிம்கள் மீதான தாக்குதலின் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷ!

## போட்டுடைத்தது பொதுபல சேனா



(கொழும்பு)

**கடந்த ஆட்சிக்காலத்தில் அளுத்கம மற்றும் பிற இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷவே இருந்தார் என்று சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்பான பொதுபல சேனா குற்றம்சாட்டியுள்ளது.**

கடந்த வாரம் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களைச் சந்தித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தம்மைத் தோற்கடிப்பதற்காக, எதிர்க்கட்சியினரும், மேற்குலக அரசாங்கங்களும் இணைந்தே, பொதுபலசேனா என்ற அமைப்பை உருவாக்கியதாக குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மகிந்த ராஜபக்ஷவின் குற்றச்சாட்டுகளை மறுத்த பொதுபல சேனாவின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே, மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப் போவதாக எச்சரித்தார்.

“மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்தவர்களே அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பெப்பிலியானவில் முஸ்லிம் வர்த்தகரின் பசன் பக் ஆடையகம் மீது பௌத்த பிக்குகள் நடத்திய தாக்குதல்களின் பின்னணியில், இருந்தனர்.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இருந்ததால் தான், குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை.மகிந்த ராஜபக்ஷ கண் ண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல் எறியக்கூடாது.

இப்போது மகிந்த ராஜபக்ஷ தனது வீடுகள், தனது கார்கள், தனது குடும்பத்தினர், தனது பாதுகாப்புப் பற்றி மட்டுமே பேசுகிறார்.

பொதுபல சேனா அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. நாட்டில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சிங்கள சமூகத்தினரையே பிரதிநிதித்துவம் செய்கி றோம்.

பொதுபல சேனாவுக்கு எதிராக பொய்யான பரப்புரைகளை மேற்கொள்ளும் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.இதுகுறித்து சட்ட நிபுணர் களுடன் ஆலோசிக்கப்படுகி றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இலங்கையில் எரிபொருள் கப்பல்

### அமைச்சர் சந்திம தகவல்

(கொழும்பு)

எரிபொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக எரிபொருள் கப்பலொன்று இலங்கைக்கு வந்துள்ளதாக பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

திடீரென எரிபொருள் தேவை ஏற்பட்டால் அதனை சமாளிக்கும் வகையில் முன்னாயத்தமாகவே இந்த கப்பல் வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், இதேவேளை வரட்சியான காலநிலை காரணமாக மின்சாரத்தினை தடையின்றி வழங்க தேவையான எரிபொருளிற்கு ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தண்டப்பண நடைமுறை நாட்டுக்கு மிகஅவசியம்

### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

போக்குவரத்து விதி முறைகளை மீறுவோருக்கு எதிரான தண்டப்பண நடை முறை நாட்டுக்கு அவசியம் என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புத்தாண்டில் தமது கடமைகளை ஆரம்பித்த பொலிஸார் மத்தியில் பொலிஸ்மா அதிபர உரையாற்றினார்.

போக்குவரத்து தண்டப்பண நடைமுறை போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறாதவர்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும். அரசாங்கம் தற்போது போக்குவரத்து விதி முறை களை மீறுவோருக்கு எதி ரான தண்டப்பணத்தை அறவிடுவது தொடர்பில் ஆராய்ந்து வருகிறது.

அபிவிருத்தியடைந்த அனைத்து நாடுகளும் இதே நடைமுறையைதான் செயற்படுத்தி வருகின்றன.

கவனமின்றிவாகனம் செலுத்துதல் மற்றும் அதிக வேகம் காரணமாக வாகன விபத்துகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள அதிகரித்து வருகிறது.வாகன நெரிசலை தவிர்ப்ப தற்காக பொலிஸார் கடுமையாக பணியாற்றி வருவதாக் வும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மேலும் தெரிவித்தார். (இ-3)


மணிவிழா வாழ்த்து



திரு. வேலுப்பிள்ளை ஞானகாந்தன்

வாழ்த்துவோர்:-
திரு.சு.சண்முககுமார்
(ஓய்வு நிலை கோட்டக் கல்வி பணிப்பாளர்)
திரு.சு.சண்முககுலகுமாரன்
(ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்)
திரு.இ.செந்தில்குமரன்
(ஓய்வு நிலை அதிபர்)
(7355)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSc/வங்கியாளர்<br>தொ.இ: B/6713 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்:O/L எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6738 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:BBA/ கணக்காளர்<br>தொ.இ: B/6714 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDA<br>தொ.இ: G/6747 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6717 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/Lசுவிஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6749 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 35 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR<br>தொ.இ: B/6719 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc USA<br>தொ.இ: G/6751 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# தென்பகுதிக்கு நெல்மூடைகள் கொண்டு செல்வதை எதிர்த்து பாவற்குளம் நெற்களஞ்சியம் முற்றுகை





(குருமன்காடு)

வவுனியா மாவட்ட நெற் களஞ்சியசாலைகளில் இருந்து தென்பகுதிக்கு நெல் மூடைகளை கொண்டு செல்லப் படுவதற்கு எதிர்ப்பு தெரிவிதது அரிசிஆலை உரிமையாளர்கள், பொதுமக்கள் களஞ்சியசாலையை முற்றுகையிட்டு தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

வவுனியா பாவற்குளம் படிவம் 6 களஞ்சியசாலையிலேயே இந்த எதிர்ப்பு நடவடிக்கை நேற்று காலை இடம்பெற்றது.

வவுனியா, பாவற்குளம் படிவம் 6 நெற்களஞ்சிய சாலையில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் நெல் மூடைகளை தென்பகுதிக்கு கொண்டு செல்வதற்கு பாரவூர்திகள் வந்திருந்தன.

இதனையடுத்து அங்கு ஒன்று கூடிய வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள், அரிசி ஆலைகளில் வேலை செய்வோர், பொது மக்கள் எனப்பலரும் எதிர்ப்பு தெரிவித்து களஞ்சியசாலையில் உள்ள நெல்லை மாவட்ட அரிசி ஆலைகளுக்கு வழங்க வேண்டும் அல்லது அதனை குற்றி மாவட்டத்தில் உள்ள சதோச மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் எமது பகுதி மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி கிடைக்கச் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, குறித்த எதிர்ப்பு நடவடிக்கை குறித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே. மஸ்தான், அரசாங்க அதிபர் எஸ்.வி.ரோஹண புஸ்பகுமார உள்ளிட்டவர்களின் கவனத்திற்கு தொலைபேசி மூலம் கொண்டுவரப்பட்டதையடுத்து நெல் மூடைகளை ஏற்றுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் பேசி முடிவு எடுக்கப்படும் என அவர்கள் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளனர். (2-250)

# தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு வீதியோட்டப் போட்டி 12 ஆம் திகதி

(மல்லாவி)

தமிழர்களின் பாரம்பரிய தினமான தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட இளைஞர் திறன் விருத்தி கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 12. ஆம் திகதி வியாழக்கிழமை காலை வீதியோட்ட போட்டி நிகழ்வு நடைபெறவுள்ளதாக அந்த நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 6 மணியளவில் இயக்கச்சி சந்தியில் இருந்து ஆரம்பமாகி A9 வீதி வழியாக கிளிநொச்சி கந்தசாமி கோவில் வரை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வீதியோட்ட போட்டி நிகழ்வில் பங்குபற்றி வெற்றியீட்டுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதுடன், வீதியோட்ட நிகழ்வில் பங்கு பற்றி இலக்கை அடையும் அனைவருக்கும் ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

மேற்படி வீதியோட்ட போட்டியில் கிளிநொச்சி மாவடடத்தை சேர்ந்த ஆண், பெண் இருபாலரும் பங்குபற்றுமாறும் அழைப்பு விடுக்கப்படுவதுடன், இதுதொடர்பில் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, போட்டியாளர்கள், பளைப் பிரதேச செயலகர் பிரிவு-ச.றஜிந்தன்-076 628 3748, கரைச்சி பிரதேச செயலகர் பிரிவு - வ.நிதர்சன்-077 085 5221, கண்டாவளை பிரதேச செயலகர் பிரிவு - ந. சயந்தன்-077 082 3921, பூநகரி பிரதேச செயலகர் பிரிவு -கி. றாஜ்குமார்-077 358 1652, ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்என மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# ஆற்று மணல் ஏற்றி பயணித்த டிப்பர் வாகனங்கள் கைப்பற்று

(மல்லாவி)

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னனின் உத்தரவுக்கமைய விசேட போதைப் பொருள் தடுப்புப் பரிவு பொலிஸ் அணியினரால் கிளிநொக்சி மாவட்டத்தில் உள்ள தருமபுரம் பொலிஸ் நிலையப பிரிவில் உள்ள தருமபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணல் ஏற்றி பயணித்த டிப்பர் வாகனங்கள் 2, கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் இருவரும் கைது செய்து தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். என். டீ. சதுரங்கா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு 11.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயப் பிரிவின் விசேட போதைப் பொருள் தடுப்பு பிரிவுப் பொலிஸாருக்கு கிடைதத இரகசியத் தகவலை அடுத்து திடீர் சுற்றி வளைப்பை மேற்கொண்டபோதே அனுமதிப் பத்திரத்திற்கு முரணாக ஆற்று மணல் ஏற்றி பயணித்த டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில், கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நாளை வியாழக்கிழமை காலை கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




**எழிலன் உள்ளிட்ட 12 பேரின்**

# ஆட்கொணர்வு மீதான வழக்கு விசாரணை தை 30இற்கு ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போகச்செய்யப்பட்டுள்ள பங்குத்தந்தை ஜோசப் பிரானசிஸ், தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் எனப்படும சின்னத்துரை சசிதரன், மஜித் இளம்பரிதி உள்ளிட்ட பன்னிரெண்டு பேரின் ஆட்கொணர்வு மனு மீதான வசாரணை நேற்று முல்லைத் தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது வழக்கு விசாரணை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

எழிலன் சார்பில் அவரது மனைவியான வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனுடன், கிருஷ்ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமிகாந்தி, கந்தசாமி பொன்னம்மா உள்ளிட்ட உறவினர்கள் இந்த ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருக்கின்றனர்.

இந்த ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பிலான வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் கடந்த செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த போது நவம்பர் மாதம் 22 ஆம் திகதி மீண்டும் குறித்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படும் என நீதிபதி அறிவித்திருந்தார்.

எனினும் கடந்த நவம்பர் மாதம் 22 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணையின் போது அரசதரப்பு சட்டத்தரணி மன்றிற்கு சமுகமளிக்க முடியாது என நீதிமன்றிற்கு அறிவித்திருந்தார்.

இதற்கமைய குறித்தவழக்கு இன்றைய தினம் (நேற்றைய தினம்) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிபதி அறிவித்திருந்தார்.

இதனை தொடர்ந்து நேற்று மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல், 58 ஆவது படைப் பிரிவின் படைத்தளபதியான மேஜர் ஜெனரல் சானக்க குணவர்தனவை குறுக்கு விசாரணை செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து வழக்கு எதிர்வரும் தை மாதம் 30ம் திகதி இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் முதலாவது வழக்கு முடிவடைந்து எழுத்து மூலமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. அதன பின்னர் இரண்டாவது வழகது தொடங்கியிருக்கிறது. அதில் ஏற்கனவே மனுதாரர் சாட்சி அழித்தபடியால் அதனை தொடர்ந்து வழக்கின் பிரதி வாதிகள் சார்பில் இராணுவ அதிகாரி ஒருவர் ஆஜரானார். அவர் தற்போது ஓய்வு பெற்றவர். இவர் சாட்சியளித்தார். ஏற்கனவே ஒருமுறை மன்றில் கூறினார். சரனடைந்தவர்களின் விபரம் உள்ளதாக கூறி அடுத்த தவணையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவரின் விபரத்தையே கூறியதாக சமர்ப்பித்தார்.


அதனையே தற்போதும் சமர்ப்பித்தார். ஆனால் இதில் காணாமல்போனோர் தொடர்பில் விபரம் இருக்க வாய்ப்பில்லை. மாறாக பலவருடங்களாக புனர்வாழ்வு பெற்ற பன்னிரெண்டாயிரம் பேரின் விபரமே உள்ளது.

அதனை குறுக்கு விசாரனை செய்தபோது இதில் காணாமல் போனோர் தொடரபான விபரம் இல்லை.மாறாக பலவருடமாக புனர்வாழ் வளிக்கப்பட்டவர்களின் விபரமே உள்ளது.இதில் இறுதி நாட்களான 17,18,19 ஆம் திகதிகளில் மே மாதம் 2009 சரணடைந்தவர்களின் விபரத்தையே கேட்டிருந்தோம். அது இருப்பதாகவே கூறினார்.

ஆனால் அதன் பின் மனம் மாறி நீதிமன்றின் கட்டளையையும் மீறி வேறு ஒரு விபரத்தை கொண்டு வந்து நீதிமன்றத்தையும் மக்களையும் மனதார எல்லோரையும் முட்டாளாக்கிய ஒரு செயற்பாட்டை செய்திருக்கிறார். இதைவிட இறுதி யுத்தத்தில் வடக்கு கிழக்கில் காணாமல் போனேரையும் தெரியாது. 1971ஆம் ஆண்டளவில் தென்னிலங்கையில் காணாமல் போனோர் தொடர்பாகவும் தெரியாது என பதிலளித்தார. இதனைத் தொடர்ந்து தை மாதம் 30 ஆம் திகதிக்கு தவணையிடப் பட்டுள்ளது என்றார். (2-281)







வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் வழிகாட்டலின் கீழ் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேவிபுரம் ஆரம்ப சுகாதார கட்டடத் தொகுதி நேற்று பிற்பகல் 4 மணியளவில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் உள்ளிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்த போது... (படங்கள்:- பனிக்கன் குளம் செய்தியாளர்)

# வில்ஸ்காடு கிராமத்திலுள்ள 30 குடும்பங்களை வெளியேறுமாறு வனத்துறையினர் உத்தரவு



(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள இராசேந்திரங்குளம் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட விக்ஸ்காடு என அழைக்கப்படும் கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களை குறித்த இடத்தை விட்டு வெளியேறுமாறு வனத்துறை அதிகாரிகள் உத்தரவிட்டிருப்பதாக தெரியவருகின்றது.

யுத்தம் காரணமாக பல்வேறு இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வவுனியாவிற்கு சென்ற மக்கள் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு பற்றைகளும் முட்செடிகளும் நிறைந்து காணப்பட்ட விக்ஸ் காடு பகுதியில் சிறிய காடுகளை வெட்டி நிலத்தை பண்படுத்தி சுயமாக இந்த மக்கள் குடியேறியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் யுத்தம் முடிவடைந்து பின்னரான காலப்பகுதியில் இதே முகவரியில் குறித்த மக்களுக்கான வாக்குரிமையும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இங்கு குடியிருக்கும் 30. குடும்பங்களுக்கும் அக்காணிகள் வழங்கப்படும் என அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளால் உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அங்குள்ள சில வீடுகளுக்கு மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை திடீரென விக்ஸ்காட்டு கிராமத்திற்கு சென்ற வனத்துறை அதிகாரிகள் அங்குள்ள மக்களை வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

மேலும் காடு வெட்டியதாக கிராம மக்கள் மீது குற்றம் சாட்டி, நேற்று முன்தினம் வவுனியாவில் அமைந்துள்ள வனத்துறையினரின் அலுவலகத்திற்கு வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை அண்மையில் இப்பகுதியின் ஒரு பக்கத்தில் இருந்த இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# வாள்வெட்டு, குழுமோதல் தொடர்பில் 4 பேர் கைது

(குருமன்காடு)

புதுவருட தினத்தன்று வவுனியாவில் கற்குழிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் குழுமோதல் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. வவுனியா, கற்குழி பகுதியில் உள்ள இரு குழுக்களுக்கிடையில் முரண் பாடு நிலவி வந்துள்ளது. புதுவருட தினத்தன்று ஒரு குழுவினர் தமது வீட்டில் பாட்டு போட்டு வீட்டின் முன் ஆடிக்கொண்டிருந்துள்ளனர்.

இதனையடுத்து ஆத்திரமடைந்த அப்பகுதியைச் சேர்ந்த மற்றுமோர் குழுவினர் அங்கு சென்று இசை எழுப்பி ஆடிக் கொண்டிருந்தவர்களுடன் முரண்பட்டுக் கொண்டதுடன் வாள், கம்பிகள், பொல்லுகளால் அவர்கள் மீது தாக்கவும் முயற்சித்தனர்.

இதனையடுத்து குறித்த வீட்டில் இருந்த பெண்கள் அதனை சமரசம் செய்ய முயற்சித்தனர். இதன்போது அங்கு சென்ற இளைஞர்கள் வீடு புகுந்து தாக்க முற்பட்ட போது இடம்பெற்ற கைகலப்பில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய வவுனியா பொலிஸார் வாள்வெட்டு, குழு மோதல் தொடர்பில் நான்கு பேரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதுடன் மேலும் மூவரை தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (2-250)




# மாற்றுவலுவுடையோருக்கு தொழில் பயிற்சி கருத்தரங்கு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாற்றுவலுவுடையோருக்கான தொழில் பயிற்சி கருத்தரங்கு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி அளவில் முழங்காவில் பொதுநோக்கு மண்டபத்தில் முழங்காவில் கிராமசேவையாளர் நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாற்றுவலுவுடையோருக்கான கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வே.தபேந்திரன், மாவட்ட சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சுரேந்திரன், பூநகரி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் இராசதுரை தர்மினி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் மாற்றுவலுவுடையோர் தமக்கு கிடைக்கின்ற வாழ்வாதாரங்களை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாகவும் தொழில் வாய்ப்புக்களை எப்படி பெற்றுக்கொள்வதென்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (2)

# மாற்றுத்திறனாளிகளின் மனங்களை நோகாது நடந்து கொள்ள வேண்டும்

## சாந்தி எம்.பி வேண்டுகோள்

(பரந்தன்)

மாற்றுத்திறனாளிகளின் மனங்கள் நோகாது எங்களது சமூகம் நடந்துகொள்ள வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ் கந்தராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று முன்தினம் போராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் செந்தூரனின் யாதுமாகி கவிதை நூல் அறிமுகவிழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு மேலும் தெரிவிக்கையில், இந்த நிகழ்வில் நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவோ, அந்த உணர்வோடும் வரவில்லை. நான் ஒரு மாற்றுத்திறனாளியாகவே வந்திருக்கின்றேன்.

அண்மையில் பங்களாதேஷுக்கு சென்றிருந்த போது அங்கு அந்த நாட்டின் விடுதலைக்காக தம்மை குடும்பத்தோடு அர்ப்பணித்த முஜிபூர் ரகுமானது குடும்பத்தில் ஒரு இரவில் ஐந்து பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

பங்களாதேஷில் நாட்டுக்காக தங்களை அர்ப்பணித்த அவர்களின் நினைவுகளை பேணுவதற்காக சுட்டுக்கொலை செய்யப்பட்ட அந்த இடத்தை மாளிகையாக மாற்றி அவர்கள் அணிந்திருந்த ஆடைகள், காலணிகள், பயன்படுத்திய சமையல் பாத்திரங்கள் மற்றும் சுடப்பட்ட தோட்டாக்கள் என எல்லாவற்றையும் கண்ணாடி பெட்டிக்குள் கௌரமாக உணர்வோடு பேணிப் பாதுகாத்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் தமிழர்கள் எல்லா சின்னங்களை தொலைத்து விட்டு இருக்கின்றார்கள்.

மாற்றுத்திறனாளிகள் தாங்களாக விரும்பி இவ்வாறு தங்களை மாற்றிக்கொண்டவர்கள் அல்ல. இந்த நாட்டுக்காக, மக்களின் விடிவுக்காக தங்களை அர்ப்பணித்து இன்று தங்கள் உடல்களில் காலை இழந்து, கையை இழந்து, கண்ணை இழந்து. இடுப்பை இழந்து பல்வேறு கொச்சை சொற்களுடன் விளிக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றார்கள் இது மிகவும் மனவருத்தமானது. இந்த நிலை மாற வேண்டும், சமூகத்தின் மனங்கள் மாறவேண்டும். எங்களுடைய மாற்றுத் திறனாளிகளை பகடைக்காய்களாக மாற்றி பலபேர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.இப்படி பல சம்பவங்கள் இடம்பெற்று வருகிறது எனவும் குறிப்பிட்டார். (2-312)

# முதியோர் கௌரவிப்பு

முல்லைத்தீவு குமுழமுனை அணைக்கும் கரங்கள் அமைப்பினால் முதியோரை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது முதியவர்கள் ஐம்பது பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் இரண்டு மாத கொடுப்பனவு வழங்கப்பட்டது.

குமுழமுனைக் கிராமத்தில் சமூக சேவை ஆற்றிவரும் கனக சுந்தரம் பாக்கியம் "குமுழ விருட்சம்" எனும் கௌரவம் வழங்கப்பட்டது. இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா கலந்து சிறப்பித்தார். (2-281)

# பொது நூலகம் அமைக்க பணிப்பு

கண்டாவளைப் பிரதேசத்தில் பொதுநூலகம் அமைக்க வேண்டிய தேவை பற்றி கண்டாவளை பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் அண்மையில் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது.

அதற்கமைவாக அரச அதிபர் மேற்கொண்ட துரித நடவடிக்கையை அடுத்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு இவ் விடயம் சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-84)





முல்லைத்தீவு மல்லாவியில் அமைக்கப்பட்ட பண்டார வன்னியனின் சிலை நேற்று திறந்து வைக்கப்பட்ட போது.... (படங்கள்: குருமன்காடு, வற்றாப்பளை செய்தியாளர்கள்)

# புதிய நிர்வாக தெரிவு


(கிளிநொச்சி -1)

கிளிநொச்சி வர்த்தக சமூக அபிவிருத்தி சங்கத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.மணிக்கு கிளிநொச்சி ஏ-9 வீதி பழைய வைத்தியசாலைக்கு அருகிலுள்ள வர்த்தக அபிவிருத்தி சங்க வளாகத்தில் நடைபெற்றது.

இதன் போது தலைவராக பாலகிருஷ்ணன் இராமநாதன், செயலாளராக மாசிலாமணி சிவராசா, பொருளாளராக பெருமாள் சந்திரகுமார் தெரிவாகினர்.

அத்துடன் கணக்காய்வாளர் உட்பட 17 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (2-277)

# புத்தாண்டுப் பலன்கள்



கரும்பின் சுவையும், எறும்பின் சுறுசுறுப்பும் கொண்ட சிம்ம இராசி அன்பர்களே!

நீங்கள் சூரியனின் ஆதிக்கத்தில் பிறந்திருப்பதால், சொல்லும் சொற்கள் எல்லாம் வெல்லும் சொற்களாக மாறுகின்றன. மனதில் நினைத்ததை மறுகணமே செய்ய வேண்டுமென்று துடிப்பீர்கள். இனம், மதம் பார்க்காமல் எல்லோருக்கும் உதவி செய்வதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. கட்சிப் பொறுப்பில் இருந்தாலும், கடை நிர்வாகத்தில் இருந்தாலும், உச்சமாக இருப்பது உங்கள் சொல்தான். உங்கள் இராசியின் சின்னம் சிங்கம் என்பதால், அச்சம் என்பதே உங்கள் அகராதியில் இருக்காது. நிமிர்ந்து நிற்கும் திறனும், துணிந்து செயற்படும் ஆற்றலும், உங்களை யார்? என்று உலகிற்கு உணர்த்திடும். கொள்கைப் பிடிப்பு உங்களிடம் அதிகம் இருக்கும்.

## புத்தாண்டில் புதிய பாதை புலப்படும்!

நீதி, நேர்மைக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பீர்கள். சில சமயங்களில் சந்தோசமாகப் பேசி சந்தர்ப்பங்களை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். ராஜ கிரகமான சூரியன், இராசிநாதனாக அமைவதால் நிர்வாகத் திறமைக்கு நிரந்தர எடுத்துக்காட்டாக விளங்குவீர்கள். நல்லவரையும், வல்லவரையும் இனம் கண்டு கொள்ளும் தன்மை உங்களுக்கு உண்டு.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு, இந்தப் புத்தாண்டு சிறப்பான பலன்களைத் தர, உங்கள் சுய ஜாதகத்தில் சூரியனின் பாத சார பலமறிந்து, வழிபாடுகளை மேற்கொண்டால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**புத்தாண்டின் தொடக்கம்**

இந்தப் புத்தாண்டு பெருமைக்குரிய ஆண்டாகவும், உற்சாகத்துடனும் செயற்பட்டு உன்னத வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் ஆண்டாகவும் அமையப் போகிறது. மாபெரும் கிரகங்களின் பெயர் இருப்பதால் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். தெளிந்த சிந்தனையுடன் செயற்படுவீர்கள். ஆவல்கள் அனைத்தும் நிறைவேறும். ஆதாயம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே கிடைக்கும்.

புத்தாண்டு தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு, ராகு ஜென்ம இராசியிலும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும், நான்காம் இடத்தில் சனியும், இரண்டாம் இடத்தில் வியாழனும் சஞ்சரிக்கிறார்கள். கேதுவுடன் செவ்வாய், சுக்ரன் சேர்க்கை பெற்றிருக்கிறது. சந்திர பலத்தோடு பிறக்கும் ஆண்டில் உங்கள் இராசிநாதனான சூரியன், ஐந்தாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய், உங்கள் இராசியைப் பார்க்கிறார்.

எனவே தொழில் வளர்ச்சியில் மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் குடும்ப உறுப்பினர்களை மகிழ்விக்கப் போகிறீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் அனுகூலமாக அமையும். எதிரிகள் உதிரிகளாவர். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

சந்திரனுக்குரிய நட்சத்திரமான திருவோணத்தில் பிறக்கும் புத்தாண்டில், முதலில் ராகு-கேதுக்களின் மாற்றம் ஏற்படப் போகிறது. ஜென்ம ராகு விலகினாலே சிக்கல்கள் அனைத்தும் விலகிவிடும். நன்மைகள் ஒவ்வொன்றாக நாடிவரும்.

குருப்பெயர்ச்சியும் நிகழவிருக்கிறது. 2இல் சஞ்சரித்து வந்த குரு, 3ஆம் இடத்திற்கு வந்து முன்னேற்றத்திற்கு வித்திடப் போகிறார். வருடக் கடைசியில் அர்த்தாஷ்டமச் சனியும் அடியோடு விலகுகிறது. இதனால் அந்தந்த கிரகங்களுக்குரிய




வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

குறிப்பாக சனிப்பெயர்ச்சி உங்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதால், திரு நள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, குச்சனூர், பெரிச்சிக் கோவில், நல்லிப்பட்டி போன்ற தலங்களுக்குச் சென்று வழிபடுவது நல்லது. அதே நேரத்தில் விஸ்வரூப ஆஞ்சநேயர் வழிபாட்டையும் மேற்கொள்ளலாம்.

**ஜென்ம ராகுவும், சப்தம கேதுவும்**

பொதுவாகவே எந்தக் கிரகங்களும், ஜென்மத்தில் இருந்தால் அதன் ஆதிபத்யங்களைப் பொறுத்து மாறுபடும். ஆனால் ராகு-கேதுக்களோ சுயபலம் அற்ற கிரகம். அவை சூரிய, சந்திரனை உள்வாங்கிக் கொள்ளும் தன்மை பெற்றவை. அப்படிப்பட்ட கிரகங்கள் பெயர்ச்சியாகும் பொழுது, தடைகள் அனைத்தும் அகலும். தானாக வாய்ப்புகள் வந்து சேரும். இல்லத்தில் மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். 27.07.2017 அன்று ராகு- கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. கடந்த 1 1/2 ஆண்டுகளாக மனக் கவலையை கொடுத்து வந்த ராகு, இப்பொழுது நிம்மதியையும், நன்மைகளையும் கொடுக்கப் போகிறார்.

ராகு அளவு கடந்த திரவியங்களை அள்ளிக் கொடுக்க வேண்டுமானால், யோகம் தரும் இடத்தில் சஞ்சரிக்க வேண்டும். 12ஆம் இடத்தில் ராகுவும், 6ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். மறைந்த ராகு நிறைந்த தன லாபத்தை கொடுக்கும். கடக ராகு என்பதால் கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். கடல்தாண்டிச் செல்லும் வாய்ப்பு உருவாகலாம்.

6இல் கேது இருப்பதால் உத்தியோக மாற்றங்கள் ஏற்படலாம். ஒப்பற்ற மாற்றங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. பணி இடத்தில் இருந்த தொல்லை அகலும். சக பணியாளர்களின் ஒத்துழைப்போடு உத்தியோகத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். நிர்வாகத்தில் நீக்கப்பட்ட சலுகைகள் உங்களுக்கு மீண்டும் கிடைக்கலாம். வெளிநாட்டிற்குச் செல்லும் முயற்சிகளில் அனுகூலம் உண்டு. கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**வெற்றி ஸ்தானத்தில் குருபகவான்**

உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் குரு. அவரது பார்வை எப்படி நமக்குக் கிடைத்தாலும், அது யோகம் தான். வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றை எடுத்துரைக்கும் 2ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு, இப்பொழுது முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச்செல்லும் 3ஆம் இடத்திற்குச் செல்கிறார். சகோதர ஸ்தானம், சகாய ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் இடத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, பிரிந்து சென்ற சகோதரர்கள் வந்திணைவர். குருவின் பார்வை 7,9,11 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்களும் புனிதமடைகின்றன. அவற்றிற்குரிய ஆதிபத்யங்களும் சிறப்பாகவே நடைபெறப் போகின்றன.

குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும், பார்க்கும் இடத்திற்கு குருபலம் கூடுதலாக இருக்கும். அந்த அடிப் படையில் குருவின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால், திருமண முயற்சி கைகூடும். 9ஆம் இடத்தை குரு பார்ப்பதால் பெற்றோர் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பூர்வீகச் சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துகள் உங்கள் பக்கம் ஜெயத்தைக் கொடுக்கும். 11ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் சகோதரர்களோடு இணக்கம் ஏற்படும். கடல் தாண்டும் முயற்சி கைகூடும், பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**சனிப் பெயர்ச்சி காமம்**

உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் அர்த்தாஷ்டமச் சனியாக சஞ்சரித்து, அதிக தொல்லைகளை கொடுத்து வந்த சனி இந்தப் புத்தாண்டில் விலகப் போகிறார். 16.12.2017இல் பெயர்ச்சியாகி பஞ்சம ஸ்தானத்திற்கு செல்லும் சனி, பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நிறைவேற்றி வைக்கும்.

பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். தடைகள் அகன்று தனலாபம் கொடுக்கும். கடைத் திறப்பு விழாக்கள், கட்டடத் திறப்பு விழாக்கள் நடத்திப் பார்ப்பீர்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். தொழிலில் வளர்ச்சி கூடுதலாக இருந்து, தொகை வரவு அதிகரிக்கும். நடக்கும் தொழில் மட்டுமல்லாமல், நாடு போற்றும் தொழில்களையும் செய்ய முன்வருவீர்கள். அரசியல்வாதிகளின் அனுகூலத்தோடும்,ஆனமீகவாதிகளின் அருளாசியோடும், எண்ணற்ற காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

சுக்ரன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 18.4.2017 வரை) கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும்.

புதன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 22.4.2017 வரை) கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. பெண்வழிப் பிரச்சினை தலைதூக்கும்.

குரு வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 31.5.2017 வரை) பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகும். ஆதரவாளர்கள் எண்ணிக்கை குறையும்.

சனி வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 6.8.2017 வரை) சஞ்சலங்கள் அதிகரிக்கும். தனியாக செயற்பட முன்வருவீர்கள். புதிய முயற்சிகளில் தாமதங்கள் உருவாகும். வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். இதுபோன்ற காலங்களில் சூரிய-சனி சேர்க்கை பெற்றிருக்கும் ஸ்தலங்களுக்கு சென்று பரிகாரம் செய்வது நல்லது.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

இராசிநாதன சூரியனைப் பலப் படுத்த, சூரியக்கதிர் மேனியில் படும் சிவபெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டியில் உள்ள கனவுகளை நனவாக்கும் கற்பகமூர்த்தியை வழிபட்டு கவலைகளைப் போக்கிக் கொள்ளுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

சிம்ம ராசியில் பிறந்த பெண்களுக்கு

**செல்வ வளம் சிறப்பாக இருக்கும். செயற்பாடுகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். சென்ற ஆண்டில் நடைபெறாத சில காரியங்கள் இந்த ஆண்டு நடைபெறும். செல்வாக்கு உயரும். தள்ளிப்போன சுபகாரியங்கள் தானாக நடைபெறும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். அனைவர் மனதிலும் நீங்காது இடம்பிடிப்பீர்கள். உடன்பிறப்புகளின் பகைமாறும். தாயின் அனுசரிப்பு கூடுதலாகக் கிடைக்கும். பெற்றோர்களின் பாசமழையில் நனைவீர்கள். வீடு, வாகனம் வாங்கும் முயற்சியில் வெற்றி உண்டு. பிள்ளைகளின் கல்வி வளரவும், கடல்தாண்டிப் படிக்கும் முயற்சிக்கு ஆதரவும் கொடுப்பீர்கள். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவோடு உத்தியோகத்தில் உங்கள் செல்வாக்கு உயரவராகி வழிபாடும் வடக்கு நோக்கிய விநாயகர் வழிபாடும் வளர்ச்சியைக் கொடுக்கும்.**

# அறிக்கையை நிராகரித்தார் அமைச்சர் பைசர் முஸ்தபா

எல்லை நிர்ணய மேன் முறையீட்டு குழுவின் அறிக்கையை, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா நிராகரித்துள்ளார்.

குறித்த குழுவில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் நியமிக்கப்பட்ட, முன்னாள் ஆளுநர் சாலிய மெதிவ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.மிஸ்பா ஆகிய உறுப்பினர்கள் இறுதி அறிக்கையில் கையெழுத்திடாமையே இதற்குக் காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை அறிக்கை தமக்கு கிடைக்கப் பெறாமையே கையெழுத்திடாமைக் குக் காரணம் என சம்பந் தப்பட்ட இருவரும் தெரிவித் தனர்.

அறிக்கையை வாசித்து பார்க்காது கையெழுத்திட முடியாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர். மேலும், குறித்த குழுவில் மக்கள் விடுதலை முன்னணி சார்பில் நியமிக்கப்பட்ட, சட்டத்தரணி உபுல் குமாரப் பெரும மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார் பில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை ஆகிய உறுப்பினர்கள் இறுதி அறிக்கையில் கையெ முத்திட்டுள்ளனர்.

இதற்கமைய தான் உள்ளிட்ட பெரும்பா லான உறுப்பினரகள் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ள தாக அக் குழுவின் தலைவர் அஷோக பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, அந்த அறிக்கையின் தரம் குறித்து பிரச் சினை தேவையில்லை என வும அவர் தெரிவித் தார். (இ-3)




# தேர்தலை காலந்தாழ்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**எல்லை நிர்ணய ஆணைக்குழு அறிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிப்பதன் ஊடாக தேர்தலை மேலும் காலந்தாழ்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருப்பதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.**

தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு எதிராக பொது மக்களை திரட்டி போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப் பொன்றில் பங்கேற்று உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் விரைவில் விசேட கூட்டத்தைக் கூட்டி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# பெருங்காயம்

Botanical Name: Ferula Asafoetida
English Name: Asafoetida
Sinhala Name: Perunkayam
Sancritcrit Name:- Agudaganda

பன்னிரண்டு வருடங்களான பின்னரே தாவரத்திலிருந்து பெருங்காயம் எனும் ரெசின் சேகரிக்கப்படும்.

பெருங்காயம் பெரிதாக வளரக்கூடிய சிறு செடி வகுப்பை சேர்ந்தது. இதன் வேர்த் தொகுதி முகிழ் உருவானது. பெருங்காயத்தின் வேர் 45 செ.மீ–50செ.மீவரை காணப் படும். வேரின் குறுக்கு வெட்டின் விட்டமானது 10செ.மீ–15செ.மீ நீளமுடையது. வேரிலிருந்து மிக கூராக முடியக் கூடிய கிளைவேர்களைகொண்டது. வேரின் தோற்றமா னது வெளிப்பக்கம் கபில நிறத்தையும் உட்பக்கம் வெள்ளை நிறமும் உடையது. இதன் இலையின் நீளமானது 75–90 செ.மீ உடையது. இதன் இலைகள் கூட்டிலைகள் பெருங்காயத்தின் இலையடி 22.5 செ.மீ நீளமுடையது. இலைகள் அழுத்தமாகவும் மென்மையாகவும் இருக்கும். பார்ப்பதற்கு பளபளப்பான இலைகளாக இருக்கும். இலைகளின் இரண்டு பக்கமும் அப்பிள் பச்சை நிறமுடையது. பூக்களை தாங்கும் தண்டு நேரானது. பூக்கள் ஆண்பூக்களும் பெண் பூக்களும் ஒரே தாவரத்திலேயே காணப்படும். இதில் 5 புல்லியும் 5 அல்லியும் காணப்படும். ஆணகத்தில் 5 மகரந்த மணிகள் காணப்படும். இதன் பழங்கள் 1–1.2 செ.மீ நீளமுடையது. இதன் பழங்கள் நீள் வட்ட வடிவமுடையது. இப்பழங்கள் ஓரளவு அழுத்தமானது. பழங்கள் மஞ்சள் கலந்த மஞ்சள் நிறமுடையது.

இத்தாவரத்திலிருந்து சேகரிக்கப்படும் ரெசின் பெருங்காயம் எனப்படும். இது மஞ்சளுடன் கபில நிறத்துடன் காணப்படும் .இதன் நாற்றம் மிக கூடியது. இது பச்சையாக எடுப்பின் குமட்டலை ஏற்படுத்தும். இதற்காக உணவுகளிலோ மருந்துகளிலோ சேர்க்கும் போது நெய்யில் பொரித்தே சேர்க்க வேண்டும். இதன் சுவை மிகக் கசப்பாக இருக்கும், சிறு கரகரப்பும் இருக்கும். இது சாராயத்தில் கரையும். நீர் விட்டரைத்தால் பால் நிறமாக இருக்கும். இதில் ஒரு வகை வெண்நிறம். அதற்கு வெள்ளைப் பெருங்காயம் (சோமகாயம்) எனப்படும்.

பெருங்காயம் குருதியை சூடாக்கி நரம்புகளை வெப்பப்படுத்தும். இது இதயத்துடிப்பை உண்டாக்கி இதயத்தை நன்னிலைப்படுத்தும்.

இதை நீர்விட்டு உரைத்து மார்பின் மீது பற்றிட குழந்தை கட்குண்டாகும் கக்குவான் குணப்படும்.



பெருங்காயத்தை நீரிலிட்டு அரைத்து கலக்கி பீச்சாக செலுத்த குழந்தைகள் வயிற்றிலுண்டாகும் பூச்சிகள் வெளிப்படும்.

அபினும் காயமும் சேர்த்து சொத்தைப் பல்லில் வைக்க வலி நீங்கும்.

பிள்ளை பெற்ற அழுக்கை வெளிப்படுத்த காயத்தை பொரித்து வெள்ளைப் பூண்டு, பனை வெல்லத்துடன் சேர்த்து காலைதோறும் கொடுக்கலாம்.

காயம் ஒன்று, உப்பு இரண்டு, திப்பிலி நான்கு, செம் முள்ளிக் கீரைச்சாறு எட்டுப் பங்கு இவற்றைக் கூட்டி அரைத்து தக்க அளவில் கொள்ளின் குன்ம சூலை, பின்னுக்கும் முன்னுக்கும் விளைகின்ற வலியாகிற தனுர்வாயு தீரும்.

சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், சீரகம், கறிவேப் பிலை, இந் துப்பு இவைகளை ஓர் எடை எடுத்து கால் பங்கு பெருங்காயம் சேர்த்து பொடித்து 325–650 மி.கி எடை சோறுண்ணும் பொழுது முத ற்பிடி அன்னத்துடன் சேர்த் துண்டு வர மந்தத்தை வில க்கி பசியையும் சீரணத்தை யும் உண்டாக்குவதுடன் வயிற்றுப்பிசம் என்பவற்றையும் போக்கும்.

கோழிமுட்டை மஞ்சட்கருவுடன் காயத்தைக் கூட்டி கொடுக்க வறட்டிருமல், பக்க வலி நீங்கும்.

வாலேந்திரபோளம், மிளகு, காயம் சேர்த்து கொடுக்க சூதகக்கட்டு ஆறும்.

பெருங்காயத்தை எண்ணெயிலிட்டு காய்ச்சி காதிலிட காதுவலி தீரும்.

கால் ஆழாக்கு நீரில் 2 கிராம் காயத்தை கரைத்து ஒரு சங்களவு எடுத்து சிறிது ஓமத்தீநீர் சேர்த்து கொடுக்க குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தம், வயிற்றுப் பொருமல் போகும்.

காயத்துடன் உளுந்து சேர்த்து பொடித்து தீயிலிட்டு புகைத்த புகையை உட்செலுத்த இரைப்பு, உப்பிசம் தணியும்.

காயத்தை நீர் விட்டரைத்து தேள்கடி, படை என்பவற்றுக்கு பூசலாம்.

குன்மவயிற்றுவலி, மகோதரம், பெருவயிறு, உப்பிசம், அஜீரணம், பொருமல், மலக்கட்டு, மூலம் ,இரத்த மூலம், ஆசனக்கடுப்பு வாயு பிரியாமை எட்டுவகையான வயிற்று வலிகள், கர்ப்பவதியின் வயிற்றுவலி, யோனிநோய், கபம், இருமல், சளியுடன் இருமல், தேள்விஷம், மலக்கிருமி, நெஞ்சுவலி, இருதய வாய்வு, இரத்தக்கிருமி, வாதவலி, குடைச்சல் இது போன்ற பல நோய்களையும் குணப்படுத்தும் மாமருந்து பெருங்காயம்.

பெருங்காயத்தை தும்பைப்பூ சாற்றுடன் அரைத்து கண்களில் மைபோல இட்டால் காமாலை விரைவில் தணியும்.

பொரித்த பெருங்காயத்தை பழைய வெல்லம் சேர்த்து அரைத்து கழச்சிக் காய ளவு மாத்திரைகள் செய்து 3 வேளை கொடுத்தால் பிள்ளைப்பேற்றில் வயிற்றில் தங்கிய கெட்டநீர் வெளி வந்துவிடும் பெருங்காயத்தையும் குங்குமத்தையும் (பெண்கள் பொட்டாக இடுவது) சேர்த்து அரைத்து மாத்திரைகளாக்கி உட் கொண்டால் நெஞ்சுவலி தணியும், இதயத்திற்கு வலிமை தரும்.

பெருங்காயத்தை நீருடன் அரைத்து தேள் கொட்டிய உடற்பகுதியில் வைத்து துணியால் புகைபோட நஞ்சின் வேகம் தணியும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# தாய்லாந்தில் கோர விபத்து 25 பேர் உயிரிழப்பு!



(பாங்கொக்)

**தாய்லாந்தில் நெடுஞ்சாலையைக் கடக்க முயன்ற வான் மீது லொறி மோதிய விபத்தில் 25 பேர் உடல் கருகிப் பலியாகினர்.**

தாய்லாந்தில் லொறியும் வானும் மோதி கொண்ட விபத்தில் 25 பேர் பலியாகினர்.

கிழக்கு தாய்லாந்தில் கிளெங் மாவட்டத்தில் உள்ள ரயாங் என்ற இடத்தில் இருந்து ஆட்களை ஏற்றிக் கொண்டு ஒரு லொறி சென்று கொண்டிருந்தது.

சாங்புரி என்ற இடத்தில் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த ஒரு வான் மீது பயங்கரமாக மோதிக் கொண்டது. இதனால் லொறியும், வானும் தீப்பிடித்து எரிந்தது.

இந்த விபத்தில் லொறியல் பயணம் செய்த 11 பேரும், வானில் சென்ற 14 பேருமாக கருகி பலியாகினர். அவர்களில் 3 வயது சிறுவனும் அடங்குவான்.

அதிவேகமாக வந்த வான் குறுக்கு வீதியைக் கடந்த போது கட்டுப் பாட்டை இழந்து லொறி மீது மோதியதாக கூறப்படுகிறது. வானில் இருந்த கியாஸ் சிலிண்டர் வெடித்ததால் தீ விபத்து ஏற்பட்டதாக கருதப் படுகிறது. (இ-7)

## செல்பி மோகம் காரணமாக முதலையிடம் சிக்கிய பெண்

தாய்லாந்தில் உள்ள தேசியப் பூங்காவிற்கு சென்ற பிரெஞ்சு பெண்மணி ஒருவர் அங்கிருந்த முதலையோடு செல்பி எடுக்க முயற்சிக்க, முதலை அவர் காலை கடித்து காயப்படுத்தியுள்ளது.

இப்போது அவர் தீவிர சிகிச்சையில் இருக்கிறார். உலக அளவில் செல்பி காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்த வண்ணமாக உள்ளன. அதில் அதிக உயிரிழப்புகள் நடக்கும் நாடுகளில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது. (இ-3)

## சின்னம்மாவின் பிச்சையில்தான் ஜெயலலிதா முதல்வரானார்

### வளர்மதியின் சர்ச்சை பேச்சு


ஜெயலலிதா உயிரோடு இருக்கும் வரை ஜெ.புகழ் பாடிய அ.தி.மு.கவின் முன்னணி நிர்வாகிகள் தற்போது 'சின்னம்மா' சசிகலா புராணம பாடி வருகின்றனர்.

ஜெயலலிதா இருக்கும் போது சசிகலாவை பற்றி வாயே திறக்காதவர்கள் சசிகலா பல்லவி பாடி வருகின்றனர்.

அந்த வகையில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்று முடிந்த அ.தி.மு.க. பொது குழுவில் பேசிய அதிமுக முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி, 1996 ஆம் ஆண்டு தொடரப்பட்ட சொத்துக்கு விப்பு வழக்கில் சின்னம்மா அப்ரூவர் ஆகியிருந்தால், அம்மாவும் இருந்திருக்கமாட்டார் அதிமுகவும் இருந்திருக்காது.

சின்னம்மா போட்ட பிச்சை தான் ஜெயலலிதா முதல்வராக இருந்தது. சின்னம்மா நினைத்திருந்தால் ஜெயலலிதாவும் எப்போதோ காணாமல் போய் இருப்பார் எனத் தெரிவித்தார். இந்தப் பேச்சு அ.தி.மு.க. தொண்டர்களிடையே சர்சசையை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

## 60பேரை பலி வாங்கிய தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்பு



ஈராக் தலைநகர் பக்தாத்தில் பல உயிர்களை பலி வாங்கிய தற்கொலை கார் குண்டுத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

தலைநகரின் புறநகர் பகுதியான சதர் நகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற குறித்த தாக்குதலில் 39 பேர் உயிரிழந்தனர். அதேவேளை, தலைநகரின் மற்றுமொரு பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் 20 பேர் உயிரிழந்ததுடன், 70 பேர்வரை காயமடைந்தனர் .

காய்கறி அங்காடியொன்றை நோக்கி டிரக் வண்டியை செலுத்தி வந்த தாக்குதல் தாரி ஒருவர், அங்கிருந்த தொழிலாளர்கள் மற்றும் சோதனை சாவடி ஒன்றின் மீது மோதியதில் 20 பேர் பலியானதாக தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் அவர் f s J Amaq இணையத் தளம் மூலம் பொறுப்பேற்றுள்ளனர். (இ-7)

## ஜெயலலிதாவுக்கு அளித்த சிகிச்சையும் அவர் மறைவுக்கு பின்பு நடந்தது என்ன?

### தமிழக ஆளுநர் விளக்கம்

ஜெயலலிதாவுக்கு அளித்த சிகிச்சையும், அவர் மறைவுக்கு பிறகும் நடந்தது என்ன? என்பது குறித்து மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் எழுதிய கடிதம் தற்போது வெளியாகியுள்ளது.

தமிழக பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவ் கடந்த மாதம் 7 ஆம் திகதி மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பிய கடிதத்தில் கூறியுள்ளதாவது,

தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா தீவிர காய்ச்சல் மற்றும் நீர்ச்சத்து குறைவு காரணமாக செப்டெம்பர் 22 ஆம் திகதி சென்னை அப்பலோ வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டார்.

தொடக்கத்தில் அவருடைய உடல்நிலை சீராக இருந்தது. பின்னர் திடீரென மோசமடைந்தது. 50 நாட்களுக்கு மேலாக வைத்தியர்கள் அளித்த தீவிர சிகிச்சைக்கு பிறகு அவருடைய உடல்நிலை சற்று தேறியது.

இதையடுத்து நவம்பர் 19 ஆம் திகதி அவர் பல்நோக்கு அதி தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து தனி அறைக்கு மாற்றப்பட்டார். டிசெம்பர்4 ஆம் திகதி மாலை நான் மும்பையில் இருந்தபோது, ஜெயலலிதாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகவும் அவருடைய உடல்நிலை மகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் எனக்கு தெரிவிக்கப்பட்டது. நான் உடனே சென்னைக்குவிரைந்துவந்தேன்.

வைத்தியசாலையில் அவருக்கு அளித்து வந்த சிகிச்சை குறித்து வைத்தியசாலை தலைவர் மற்றும் வைத்தியர்கள் எனக்கு விளக்கம் அளித்தனர். ஜெயலலிதாவுக்கு நுரையீரல் செயற்பாட்டுக்கான இயந்திரமான எக்மோ வழியாக சிகிச்சை அளிப்பதாக தெரிவித்தனர். எனினும் அவருடைய உடல்நிலை மிகவும் ஆபத்தான நிலைக்கு மீண்டும் சென்றது.

இதனால் டிசெம்பர் 5 ஆம திகதி இரவு 11.30 மணிக்கு அவருடைய உயிர் பிரிந்ததாக அறிவிக்கப்பட்டது.

அதேநாள் இரவு அ.தி.மு.க. கட்சியின் பொருளாளரும், மூத்த அமைச்சருமான ஓ. பன்னீரசெல்வம் ஆளுநர் மாளிகையில் என்னை சந்தித்தார். அப்போது ஜெயலலிதாவின் மரணத்தை தொடர்ந்து கட்சி எம்.எல்.ஏக்கள் அனைவரும தன்னை அ.தி.மு.க.வின் சட்டமன்ற தலைவராக ஒருமன தாக தேர்ந்தெடுத்து தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாக கடிதத்தை ஓ.பன்னீர்செல்வம் என்னிடம் அளித்தார். இதனால நான் இந்திய அரசியல் சட்டப் பிரிவு 164(1)ன் கீழ் ஓ.பன்னீர் செல்வத்தை தமிழக முதலமைச்சராக நியமித்து அரசு அமைக்குமாறு உத்தரவிட்டேன்.

இதனை தொடர்ந்து முதலமைச்சராக அறிவிக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வம் தன்னுடைய தலைமையில் 31 உறுபபினர்கள் அடங்கிய அமைச்சரவை பட்டியலை என்னிடம் அளித்தார். டிசெம்பர் 6 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு ஆளுநர் மாளிகையில் புதிய அமைச்சரவையின் பதவிப் பிரமாண நிகழ்ச்சி நடைபெற்றது என அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## மிரட்டலுக்கு அமெரிக்கா அஞ்சாது பயங்கரவாத விவகாரத்தில் இரட்டை வேடம் வேண்டாம்

### பாகிஸ்தானுக்கு ட்ரம்ப் மிரட்டல்



(வோஷிங்டன்)

தீவிரவாத விவகாரத்தில் இரட்டை வேடம் போட வேண்டாம் என பாகிஸ்தானை ட்ரம்ப் கண்டித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள ட்ரம்ப் அவரது டுவிட்டரில் பயங்கரவாத விடயத்தில் பாகிஸ்தான் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். பாகிஸ்தான் இரட்டை வேடம் போட வேண்டாம். பாகிஸ்தான் போக்கை பொறுத்து கொள்ள முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மேலும் வட கொரியா அணு ஆயுதம் தயாரித்து வெற்றி கொள்ள முடியாது. இந்த விடயத்தில் அமெரிக்காவை வெல்ல முடியாது. மிரட்டலுக்கு அமெரிக்கா அஞ்சாது என மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 10 ஆம் திகதி இறுதி உரை

(வோஷிங்டன்)


அமெரிக்க ஜனாதிபதியாக தனது இறுதி உரையை எதிர்வரும் 10 ஆம் திகதி தனது சொந்த நகரான சிக்காக்கோவில் நிகழ்த்தவுள்ளதாக ஒபாமா அறிவித்துள்ளார்.

தனது உரையில்8 ஆண்டு கால வியத்தகு பயணத்திற்காக அமெரிக்க மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள உள்ளதாக தெரிவித்தார்.

இந்த வியத்தகு பயணம் குறித்து நன்றி சொல்வதற்கான வாய்ப்பு குறித்து நான் சிந்தித்து வருகிறேன் என்று ஒபாமா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன் உரை நிகழ்த்தியதை முன்னுதாரணமாக கொண்டு தான் பிரிவு உரை நிகழ்த்த உள்ளதாகவும் ஒபாமா தெரிவித்துள் ளார்.

2009 ஆம் ஆண்டு ஜோர்ஜ டபிள்யூ புஷ் தனது இறுதி உரையை வெள்ளை மாளிகையில் நிகழ்த்தியிருந்தார். சிக்காக்கோவில் தான் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது சட்டப்படிப்பை நிறைவு செய்தார். வெள்ளை மாளிகை வருவதற்கு முன் ஒபாமாவின் முதல் இல்லம் சிக்காக்கோதான் என்று ஜனாதிபதியின் குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர்.



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது, ஒபாமா கொண்டு வந்த பல திட்டங்களை இரத்து செய்யப் போவதாக கடுமையாக டொனால்டு ட்ரம்ப் பிரசாரம் செய்த போதிலும், தேர்தல் வெற்றிக்கு பிறகு எந்த பிரச்சினையும் இன்றி அதிகாரம் ஒப்படைக்கப்படும் என்று ஒபாமா கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சாதி, மதம், இனம், மொழியின் பெயரால் வாக்கு சேகரிக்க கட்சிகளுக்குத் தடை!

## முக்கியத்துவம் வாய்ந்த 'இந்துத்துவா' வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

(டில்லி)

***சாதி, மதம், இனம், மொழியின் பெயரால் தேர்தலில் மக்களிடம் வாக்கு கேட்பது சட்டவிரோத செயல். அரசியல்வாதிகள் யாரும் அதுபோல் வாக்கு கேட்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது.***

மகாராஷ்டிர மாநில சட்டப் பேரவைத் தேர்தலின் போது, பா.ஜ.கவைச் சேர்ந்த மனோகர் ஜோஷி, இந்துத்துவா கொள்கைகளை முன்வைத்து பிரசாரம் செய்தார். அவரது வெற்றி செல்லாது என்று அறிவிக்கக் கோரி என்.பி.பாட்டீல் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

'இந்துத்துவா வழக்கு' என்று பெயர் பெற்ற இவ்வழக்கு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்தது. கடந்த 1995 ஆம் ஆண்டு இந்த வழக்கை 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து, "இந்துத்துவா என்பது மக்களின் வாழ்க்கை முறை. அதன் அடிப்படையில் வாக்கு சேகரித்தால் வேட்பாளரை பாதிக்காது" என்று தீர்ப்பளித்தனர்.

இந்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்குடன் தொடர்புடைய வேறு சில மனுக்களும் சேர்க்கப்பட்டன. குறிப்பாக மும்பை சான்டாகுரூஸ் சட்டப் பேரவைத் தொகுதியில் கடந்த 1990ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு பா.ஜ.க. வேட்பாளர் அபிராம் சிங் என்பவர் வெற்றி பெற்றார். இவரது வெற்றியை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த பாம்பே உயர் நீதிமன்றம், அபிராம் சிங்கின் தேர்தல் வெற்றியை ஒதுக்கி விட்டது. இதை எதிர்த்து அவரும் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவும் இந்துத்துவா வழக்குடன் சேர்த்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின்போது, ஒரு மதத்தின் தலைவர், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு வாக்களிக்கும்படி தன்னுடைய ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டால், மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 123இன்படி சட்டவிரோத செயலா? என்ற முக்கிய கேள்வி முன்வைக்கப்பட்டது.

பின்னர் இந்த வழக்கு 5 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்த வழக்கை 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்கும் என்று கடந்த பெப்ரவரி மாதம் உச்ச நீதிமன்றம் அறிவித்தது. அதன் பின் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்குர் தலைமையில் 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு அமைக்கப்பட்டது.

இந்த அமர்வில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் யு.யு. லலித், ஏ.கே.கோயல், டி.ஒய். சந்திரசூட், எம்.பி.லோகுர், எஸ்.ஏ.பாப்தே, எல்.என்.ராவ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இந்த வழக்கின் விசாரணை முடிந்து கடந்த ஒக்டோபர் 27இல் திகதி குறிப்பிடாமல் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்குர், எம்.பி.லோகுர், எஸ்.ஏ.பாப்தே, எல்.என்.ராவ் ஆகிய 4 பேர் அளித்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது,

சாதி, மதம், இனம், மொழியின் அடிப்படையில் தேர்தலில் வாக்கு சேகரிப்பது சட்டவிரோதமானது, முறையற்ற செயல். மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 123(3) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 'அவரது மதம்' என்பது சட்டவிரோத நடவடிக்கைகளை பற்றியது. இங்கு மதம் என்பது வாக்காளர்கள், வேட்பாளர்கள், அவர்களுடைய ஏஜென்ட்கள் என அனைவரையும் குறிக்கும்.

இதுபோன்ற பிரச்சினைகளை கையாளும்போது மதச்சார்பின்மையையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, தேர்தல் சட்ட விதிகளின்படி சாதி, மதம், இனம், மொழியின் அடிப்படையில் வாக்கு சேகரிக்கக்கூடாது. தேர்தல் நடைமுறைகள் அனைத்தும் மதச்சார்பற்றவை. மக்களுக்கும் அவர்கள் வழிபடும் நபர்களுக்கும் உள்ள உறவு என்பது தனிப்பட்ட விருப்பத்தை பொறுத்தது. எனவே, ஜாதி, மதம், இனம், மொழியின் அடிப்படையில் வாக்கு சேகரிக்க முடியாதுஎன நான்கு நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். (இ)

## சசிகலாவை தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்க வலியுறுத்தியது ஏன்?

### தம்பிதுரை விளக்கம்



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சசிகலா உடனடியாக தமிழக முதலமைச்சராக வேண்டும் என்று கோரிக்கை விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ள தம்பிதுரை அதற்கான காரணங்களை செய்தியாளர்களிடம் விபரித்தார்.

முன்னதாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை சென்னை போயஸ் கார்டனுக்கு தனது மனைவியுடன் தம்பிதுரை வந்தார். சுமார் ஒரு மணிநேரம் போயஸ் கார்டன் வீட்டில் சசிகலாவுடன் அவர் ஆலோசனையில் ஈடுபட்டார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "அ.தி.மு.க. பொதுச்செயலாளராக இருக்கும் சசிகலா உடனடியாக தமிழக முதல்வராக பொறுப்பேற்க வேண்டும் என நேரில் வலியுறுத்தினேன். எனது கோரிக்கையை பரிசீலிப்பதாக அவர் கூறினார்".

அப்போது செய்தியாளர் ஒருவர், "ஓ.பி.எஸ். தமிழக முதல்வராக தொடர்வதில் உங்களுக்கு விருப்பமில்லையா?" என வினவினார்.


அதற்கு பதிலளித்த தம்பிதுரை, "உத்தரப் பிரதேசத்தில், ஆளும் சமாஜ்வாதி கட்சியின் பொறுப்பு ஒருவரிடமும் ஆட்சிப் பொறுப்பு ஒருவரிடமும் இருக்கிறது. இதனால், அக்கட்சிக்குள் பல்வேறு சிக்கல்கள் உருவெடுத்துள்ளன.

அதேபோல் தமிழகத்திலும் ஒரு சூழல் ஏற்பட்டு விடக்கூடாது என்ற காரணத்தாலேயே கட்சிப் பொறுப்பு, ஆட்சிப் பொறுப்பு இரண்டையும் ஒருவரே வைத்துக்கொள்ள வேண்டும் என சசிகலாவிடம் நேரில் வலியுறுத்தியுள்ளேன். என்னுடைய விருப்பத்தை தெரிவித்திருக்கிறேன், மற்றவர்களின் எண்ணம் என்னவென்பது எனக்குத் தெரியாது. இதுதவிர இப்போதைக்கு வேறு எந்த கேள்விக்கும் நான் பதில் அளிக்கத் தயாராக இல்லை" என்றார். (இ-7)

## நெருக்கடியால் ஓ.பி.எஸ். இராஜினாமா

# எதிர்வரும் 10 அல்லது 12ஆம் திகதியன்று சசிகலா முதல்வராக பொறுப்பேற்கத் திட்டம்





தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்திடமிருந்து இராஜினாமா கடிதத்தை நெருக்கடி கொடுத்து வாங்கிவிட்டனர் என அ.தி.மு.க. வட்டாரங்கள் ஊடாகத் தெரியவருகிறது.

ஜெயலலிதா மறைவைத் தொடர்ந்து தாமே முதல்வராக விரும்பினார் சசிகலா. ஆனால் மத்திய அரசு இதற்கு முட்டுக்கட்டை போட்டு அமைச்சரவையில் 2ஆவது இடத்தில் இருந்த ஓ.பன்னீர்செல்வத்தை முதல்வராக்கியது.

### பொதுச்செயலர் பதவி

இதை சசிகலா உட்பட மன்னார்குடி கோஷ்டியால் ஏற்க முடியவில்லை. இதையடுத்து அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆதரவு இருப்பதாக 25 நாட்கள் நாடகத்தை அரங்கேற்றி அ.தி.மு.க. பொதுச்செயலர் பதவியைக் கைப்பற்றினார் சசிகலா.

அ.தி.மு.க. பொதுச் செயலர் பதவியைக் கைப்பற்றிய உடனேயே மீண்டும் முதல்வர் பதவிக்கு குறிவைத்தது மன்னார்குடி கோஷ்டி. அமைச்சர்கள் மூலமாக போர்க்கொடி தூக்க வைத்தனர். உச்சகட்டமாக லோக்சபா துணை சபாநாயகர் தம்பிதுரையும் பன்னீர்செல்வத்துக்கு எதிராக கலகக் குரல் எழுப்பினார்.

### இராஜினாமா கடிதம்

நிலைமை மிகமோசமான நிலையில் எந்த காரணத்தை முன்னிட்டும் இராஜினாமா செய்ய வேண்டாம் என மத்திய அரசு ஓ.பன்னீர்செல்வத்துக்கு அறிவுறுத்தல் விடுத்தது.

ஆனால் போயஸ் கார்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆலோசனைகளின் போது பன்னீர்செல்வத்துக்கு நெருக்கடி கொடுத்து இராஜினாமா கடிதத்தை வாங்கி விட்டனர்.

### ஜனவரி 10 அல்லது 12இல் பதவியேற்பு

இதேவேளை மாவட்டவாரியான அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி வரை இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதற்குப் பின்னர் ஜனவரி 10 அல்லது 12ஆம் திகதியன்று சசிகலா முதலமைச்சராக பொறுப்பேற்க திட்டமிட்டுள்ளார். (இ-7)

# நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணையுங்கள்

# அதிகார மோகம் அவசியமில்லை



## ஜனாதிபதி மைத்திரி இடித்துரைப்பு

(கொழும்பு)

**இன்று நாட்டுக்குத் தேவைப்படுவது அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அதிகாரத்திற்கு வர இருப்பவர்கள் அதிகாரத்தை நோக்காகக் கொண்டு செயற்படுவதன்றி அனைவரும் சகோதரத்துவத்துடனும் ஒழுக்கப் பண்பாட்டுடனும் நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவதாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கேற்ப சுபீட்சமான தேசத்தை உருவாக்குவதற்காக பேண்தகு யுகத்தின் தொலைநோக்கை வெளியிட்டுவைக்கும் தேசிய நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டை நாட்டில் வறுமையை ஒழித்துக்கட்டும் ஆண்டாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளதுடன், வறுமையை ஒழித்துக்கட்டுவதற்கான அரசாங்கத்தின் தொலைநோக்கிற்கேற்பவும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்வதற்காகவும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

2030 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்வதற்கு இலங்கையின் பயணம் தொடர்பாக இலங்கையில் தேசிய கொள்கையைத் தயாரிப்பதற்கும் அதனோடு இணைந்ததாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2030 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் 17 இலக்குகளுக்கான 17 துறைகளின் நிபுணர்களை உள்ளடக்கிய ஒரு குழுவின் மூலம் தேசிய கொள்கை வடிவமைக்கப்படவுள்ளது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி 2017 ஆம் ஆண்டு நாம் ஒரு நாடு என்ற வகையில பொருளாதார ரீதியாக பலமடையவேண்டிய வருடமாகும். மக்களை வறுமையிலிருந்து விடுவிப்பதற்கும் பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இந்த ஆண்டு எடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் தேசிய கைத்தொழில் மற்றும் விவசாயத்துறையை முன்னேற்றி ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இயற்கை வளங்களைப் பாதுகாத்து பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்வதற்காக நாம் பயணிக்க வேண்டும். மனிதர்களுக்கும் பூமியின் உரிமையைப்பெற்றுள்ள அனைவருக்கும் அதன் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அன்று மகிந்த தேரர் குறிப்பிட்ட விடயம் அன்றுபோல் இன்றும் என்றும் ஏற்புடையதாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பேண்தகு அபிவிருத்தி இலக்கை நோக்கிப் பயணிக்கின்றபோது தேசிய நல்லிணக்கம் மிகவும் முக்கியமானதாகும் எனக்குறிப்பிட்ட ஜனாதிபதி, இனங்களுக்கிடையிலான ஐக்கியம், சகோதரத்துவம், நம்பிக்கையை உறுதிப்படுத்துவதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புத்தாண்டுப் பிறப்புடன் நாட்டின் எதிர்காலத்திற்காக ஒரு முக்கியமான நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து வைக்கக் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி, அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், சமயத்தலைவர்கள் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனக்கூறினார்.

பேண்தகு யுகத்தின்தொலை நோக்கை ஜனாதிபதி இதன்போது வெளியிட்டுவைத்ததுடன், 2030 பேண்தகு அபிவிருத்தித் தொலைநோக்கை ஆவணப்படுத்தும் விசேட குழுவின் உறுப்பினர் பேராசிரியர் மொஹான் முனசிங்கவிடம் அதனைக் கையளித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கருஜெயசூரிய உள்ளிட்ட அமைச்சர்கள், பிரதம நீதியரசர் ஸ்ரீபவன், வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-3)

## இலங்கை வைத்தியரின் மகத்தான கண்டுபிடிப்பு

(கொழும்பு)

குறைந்தசெலவில்செயற்கை சுவாச இயந்திரமொன்றை இலங்கை வைத்தியர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

இந்தச் செயற்கை சுவாச இயந்திரத்தை இலகுவில் எடுத்துச் செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்களில் ஒருவரான டாக்டர் துலான் சமரவீரவே இவ்வாறு நவீன சுவாச இயந்திரத்தை கண்டுபிடித்துள்ளார்.

தனது கண்டு பிடிப்பு பற்றி தெரிவிக்கையில்,

வோர்டில் சிகிச்சை பெற்று வரும் நோயாளி ஒருவருக்கு, தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றம் செய்யும் வரையில் இந்த புதிய கருவியின் மூலம் சுவாசம் வழங்கப்பட முடியும்.

வைத்தியசாலை ஒன்றிலிருந்து மற்றுமொரு வைத்தியசாலைக்கு நோயாளியை காவிச் செல்லும் போது நோயாளர் காவு வாகனத்தின் பற்றரியில் இந்த இயந்திரத்தைப் பொருத்தி செயற்கை சுவாசத்தை நோயாளிகளுக்கு வழங்க முடியும்.

தற்போது பலூன் போன்ற ஓர் இயந்திரத்தை நோயாளர் காவு வண்டியில் செல்லும் வைத்தியர் அல்லது தாதி அழுத்தி அழுத்தி சுவாசத்தை வழங்க வேண்டியிருக்கின்றது.

4-5 மணித்தியால பயணம் என்றால் இவ்வாறு தொடர்ச்சியாக அழுத்தி அழுத்தி செயற்கை சுவாசம் வழங்குவது சிரமமான காரியமாகும்.

பிரதான வைத்தியசாலையில் செயற்கை சுவாச இயந்திரங்கள் காணப்படுகின்றன. எனினும் இதுபோன்று இடம் நகர்த்தக் கூடிய இயந்திரங்கள் கிடையாது.

மேலும் செயற்கை சுவாச இந்திரமொன்றை கொள்வனவு செய்ய 8 முதல் 17 இலட்சம் வரையில் செலவாகும்.

நான் உருவாக்கியுள்ள இந்த இயந்திரத்திற்கு வெறும் 15000 ரூபா மட்டுமே செலவாகியுள்ளது. எனவே இந்த இயந்திரத்தை உருவாக்கி வைத்தியசாலைளுக்கும்நோயாளர் காவு வண்டிகளுக்கும் வழங்கப்பட முடியும்.

இந்த இயந்திரத்தை உருவாக்க அரசாங்கத்தின் உதவியுடன் சுகாதார அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நான் கோருகின்றேன்.

நான்கண்டுபிடித்த தொழிலநுட்பம் மற்றும் ஏனைய உதவிகளை வழங்க தயாராக இருக்கின்றேன்.

கைகளினால் இயக்கக் கூடிய செயற்கை சுவாச இயந்திரத்தை பயன்படுத்துவது மிகவும் சிரமமானது என்பதனை அனுபவ ரீதியாக அறிந்து கொண்டதனால் இவ்வாறு, புதிய இயந்திரமொன்றை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன் என டாக்டர் துலான் சமரவீர தெரிவித்துள்ளார். (இ-3)

## மகிந்தவை திட்டிய ஷிராந்தி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த மகனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல ராஜபக்ஷ திருமணம் முடிக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளார்.

இந்த வருடத்தில் அவசியம் திருமணம் செய்ய வேண்டும் என மகிந்தவின் குடும்ப ஜோதிடரினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அவரது திருமணத்திற்காக பொருத்தமான ஜாதகத்தை கொண்ட அரசியல் அல்லது வர்த்தக குடும்பத்தை சேர்ந்த பெண் ஒருவரை தேடுவதற்காக ஷிராந்தி ராஜபக்ஷ நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சிங்கள ஊடகம்ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

குடும்பத்தின் ஏனைய பிள்ளைகள் திருமணம் செய்ய வேண்டும் என்பதனாலும் மூத்த மகன் திருமணம்செய்யாமல் உள்ள நிலையில்அவர்களுக்கு திருமணம்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நாமலுக்கு விரைவில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பது ஷிராந்தி ராஜபக்ஷவின் கருத்தாகும்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக செயற்பட்ட சந்தர்ப்பத்தில குடும்பத்தின் மூவரில் ஒருவருக்கேனும் திருமணம் செய்து வைப்பதற்கு தந்தை என்ற ரீதியில் மகிந்த ராஜபக்ஷ அக்கறை காட்டாமை தொடர்பில் பலமுறை ஷிராந்தி ராஜபக்ஷ, மகிந்தவை திட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

## 35 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டன

(கொழும்பு)

சட்டவிரோதமாக 350 சிகரெட் அட்டைப்பெட்டிகளை நாட்டுக்குள் கொண்டுவர முற்பட்ட மூவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

டுபாயில் இருந்து நாட்டுக்கு வருகை தந்த கொழும்பு பிரதேசத்தினைச் சேர்ந்த மூவரே இவ்வாறு நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி சுமார் 35 இலட்சம் என சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளை சுங்கப் பிரிவினர் கையகப்படுத்தியதுடன், குறித்த சந்தேக நபர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் வதிக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

## நான்கு கடைகள் சேதம்

மஸ்கெலியாவில் திடீரென ஏற்பட்ட தீயினால் நான்கு கடைகள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கவரவில கொலனி பகுதியிலுள்ள பலசரக்குக் கடை, தையல் நிலையம், களஞ்சியசாலை மற்றும் பூட்டியிருந்த கடையொன்று ஆகிய நான்கு கடைகளுமே நேற்று முன்தினம் மாலை தீயினால் சேதமடைந்துள்ளது.

முதலில் பலசரக்குக் கடையிலேயே தீ ஏற்பட்டதாகவும் அதன் பின்னரே மற்றைய பகுதிகளுக்கு தீ பரவியதாகவும் சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவித்தனர்.

இதனையடுத்து பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸாரினதும் முயற்சியில் இரண்டு மணித்தியாலத்தின் பின் தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீயினால் ஏற்பட்ட சேதங்கள் எவ்வளவு என இதுவரையில் மதிப்பிடப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# சீனாவிலிருந்து இரு விமானங்களை கொள்வனவு செய்ய அரசு தீர்மானம்

(கொழும்பு)

சீன உற்பத்தியில் உருவான வை. 20 ரக இரு இராணுவ விமானங்களை புதிய வருடத்தில் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இராணுவ வீரர்களை ஏற்றிச் செல்வதற்கு இந்த விமானங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக இராணுவ மேல்மட்ட தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விமானங்களை சீனாவிலிருந்து கொள்வனவு செய்வதற்கு அமெரிக்க விமான சேவை அதிகாரிகளின் அனுமதியை இலங்கை அரசாங்கம் பெற வேண்டி வரும் எனவும் கூறப்படுகின்றது.

மணித்தியாலத்துக்கு 918 கிலோமீற்றர் வேகம் பயணிக்கக் கூடிய இந்த விமானம் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் குறையவில்லை



## அஸாத் சாலி அரசு மீது விசனம்

இலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் முஸ்லிம்களுக்கெதிரான இனவாத செயற்பாடுகள் குறைவடைவதில்லை என்பதற்கு ஜனாதிபதியின் வில்பத்து தொடர்பான கூற்று ஆதாரமாகும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கு எதிராக தலைதூக்கியுள்ள இனவாத செயற்பாடுகள் குறித்து முறையிட ஜெனீவா சென்றுவந்தது தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த மகிந்த ராஜ பக்ஷ அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கெதிராக 430இற்கும் மேற்பட்ட உரிமை மீறல்கள் நடைபெற்றிருந்ததாகவும் இந்த நல்லாட்சியிலும் 200 இற்கு மேற்பட்ட உரிமை மீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக அரசாங்கம் அமைதி காப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த 23 மாத நல்லிணக்க முயற்சிகள் முஸ்லிம்கள் விடயத்தில் எவ்வித பயனும் அளித்துள்ளதாக தெரியவில்லை. அனைத்தும் அரசியல் நாடகமே தவிர வேறில்லை. கடந்த அரசாங்கத்தின் அனுமதியுடனேயே முஸ்லிம்கள் மரிச்சுகட்டிய மற்றும் அவர்களின் பூர்வீகங்களில் குடியேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போது வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பிரதேசங்களை வன பிரதேசமாக அறிவிப்பது நியாயமானதல்ல.

23 மாத காலமாக வீடுகள் நிர்மாணிக்கப்படும் வரை இருந்துவிட்டு இப்போது அப்பிரதேசங்களை வர்த்தமானி மூலம் அறிவிப்பது அம்மக்களை அகதிகளாக்கும் வேலையாகும். ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பிழையான தகவல்களை வழங்குபவராக இருந்து விடக்கூடாது. அமைச்சர் றிசாத் அவரது உறவினரகளுக்கோ, அவரது விருப்பப்படியோ இவற்றை செய்யவில்லை. இது கடந்த அரசாங்கத்தின் திட்டமாகும். இதை ஜனாதிபதி விளங்காமை கவலையளிக்கின்றது. நாட்டில் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது என்ற ஏமாற்றமே ஜெனீவா செல்லத் தூண்டியது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# தங்காலையில் பள்ளிவாசல் கட்டிக்கொடுக்கிறார் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முஸ்லிம் மத தலைவர்களுக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

புதுவருட தினத்தை அடுத்து முஸ்லிம் மதத் தலைவர்களை சந்தித்த மகிந்த, அவர்களின் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார்.

மகிந்தவின் கால்டன் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

அம்பாந்தோட்டை மாவட்ட பிரதான முஸ்லிம் மத தலைவர்களான மொஹமட் அல் பாஹிஸ், வசீர் மவுலானா நசீம் தலைமையிலான குழுவினர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது அந்தப் பிரதேசத்தில் புதிதாக கட்டப்படும் பள்ளிவாசலின் நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் அமைப்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக மகிந்த உறுதியளித்துள்ளார்.

இதற்கான பணம் மற்றும் பொருட்களுக்கு தேவையான உதவிகளை வழங்குமாறு பசில் ராஜபக்ஷவுக்கு மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி அழைப்பின் ஊடாக பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்தத் தகவலை மகிந்தவின் ஊடக அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

# மித மிஞ்சிய வகையில் மிரட்டினால் மாற்று நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

லொத்தர் சீட்டு விற்பனை முகவர்கள் மித மிஞ்சிய வகையில் அரசாங்கத்தை மிரட்டினால் மாற்று நடவடிக்கை எடுக்க நேரிடும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில்நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

"ஓவரா சண்டித்தனம் காட்டினால்" இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் புதியவர்களுக்கு லொத்தர் சீட்டு விற்பனைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே விற்பனை செய்வதற்காக அனுமதி கோரி காத்திருக்கும் பட்டியலில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின்ஏனைய அனைத்து பகுதிகளிலும் லொத்தர் சீட்டு விற்பனை செய்ய அனுமதியளிக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப் பட்டு வருவதாக தெரிவித்தார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## இதை நீங்க சொல்லணுமா?

நம்மிடம் பிறர் ஒரு பொறுப்பை ஒப்படைக்கும் போது அதில் ஒரு மறைமுகக் கடமை இருந்தால் அதை மனப்பூர்வமாக ஏற்க வேண்டும். ஒரு சிறு திருத்தம். ஏற்பதாகக் காண்பித்துக் கொள்ளவாவது வேண்டும்.

பக்கத்துவீட்டுக்காரர் நீண்ட தூரம் பயணமாகிறார். வீட்டைக் கொஞ்சம் பார்த்துக்குங்க என்கிறார். உடனே நத்தை மாதிரியும் ஆமை மாதிரியும் உடலை உள்ளுக்குள் இழுத்துக் கொள்ளக் கூடாது.

இதெல்லாம் நீங்க சொல்லணுமா? நல்லாப் பார்த்துக்கறேன். கவலையே படாமப் போயிட்டு வாங்க என்று உடனே இதயபூர்வமான பதில் ஒன்றைச் சொல்ல வேண்டும்.

இதை விடுத்து வீட்டையாவது நான் பார்த்துக்கிறதாவது? ஏதாச்சும் நடந்ததுன்னா யார் பொறுப்பு? என்கிற வழியில் சிந்திக்க ஆரம்பித்து சரி என்று கூடச் சரிவரத் தலையாட்டாமல் விட்டுவிட்டால் நாளை நமக்கொரு பயணம் வரும் போது பக்கத்து வீட்டுக் காரர் இருக்கார், கவலையே இல்லை என்ற நம்பிக்கையை நம்மால் இதயத்தில் நிரப்பிக் கொள்ள முடியாது.

வீட்டை ஏதோ தலை மேல் சுமந்து கொண்டு திரிய இருப்பதைப் போல் மலைப்பான விடயமாகக் கருத வேண்டியதில்லை. நாளை ஓர் அசம்பாவிதம் நடந்தால் கூட பாவம் அவர் என்ன செய்ய முடியும்? என்று தான் விமர்சனம் கிளம்புமே தவிர அவப் பெயர் வராது.

மாறாக, தயங்கித் தயங்கிப் பொறுப்பை ஏற்றிருந்தால், மனுஷன் அப்பவே சரின்னா சொன்னாரு? என்று விடயம் திசை திரும்பி விடும்.

வீட்டுப் பொறுப்பு என்றில்லை. தன்னுடன் அடுத்த மேசையில் பணிபுரிகிற ஒருவர் ஒரு பொறுப்பை ஒப்படைத்தாலும் சரி திருமணத்தில் பந்தி விசாரணைப் பொறுப்பை ஒப்படைத்தாலும்சரி, உறவினர் வீட்டுக் குழந்தைகளை ஒரு திரைப்படம் பார்க்கிற நேரத்திற் குப் பராமரிக்கும் வேலையாய் இருந்தாலும் சரி, எதையும் மனப்பூர்வமாக ஏற்பதோடு அதெல்லாம் கவலையே படாதீங்க, நல்லாக் கவனிக்கிறேன் என்று இதயத்தின் அடித் தளத்திலிருந்து சொல்ல வேண்டும்.

நீங்க இருந்தா எப்படி நடக்குமோ அப்படி நடக்கும் கவலையே படாதீங்க என்று மனப்பூர்வமாகச் சொல்ல வேண்டும்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கோயில் மாடு மாதிரிச் சில பேர் தலையாட்டுவார்கள். இது நாம் அந்தப் பொறுப்பை வேண்டா வெறுப்பாக ஏற்பதாகவே புரிந்து கொள் ளப்படும். ஆர்ப்பாட்டமாகப் பேச விரும்பாத வர்கள். சரி அப்படியே செய்கிறேன்,அல்லது அவசியம் செய்து தருகிறேன் என்று சுருக்க மாகச் சொன்னால் கூடப் போதும்.

இப்படி நடந்து கொள்ளும் போது நமக்கு ஒரு பிரச்சினை என்கிற போது அதை எவர் மீதாவது நாம் இறக்கி வைக்க முடியும்.

மேலும் இதோ ! ஓர் ஆத்மார்த்தமான நண்பர் நமக்கு இருக்கிறார். இவரை விட நமக்கு வேண்டியவர் வேறு யார்? என்று நம்மைச் சுற்றியுள்ளவர்களை எண்ணத் தூண்டும். பிறரது இந்த நினைப்பு நமக்கு எப்படியெல்லாம் உதவியாக இருக்கும் தெரியுமா?

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






எல்லோருக்கும் சில விருப்பங்கள் இருக்கும்... அது, நிகழவே நிகழாது. அதை, நிகழ்த்த முடியாது என்று நமக்கு நன்கு தெரியும். இருந்தாலும் அதற்காக நாம் ஏங்குவோம். அதுபோல ஓர் ஏக்கம், ஜெயலலிதாவுக்கு தன் சிறுவயது முதலே இருந்தது. அது, 'தான் ஆணாகப் பிறக்கவில்லையே...' என்பதுதான். இதுகுறித்து அவர் எழுதியும் இருக்கிறார். "எனக்கு விவரம் புரியத் தொடங்கிய நாள் முதலே, என் உள்ளத்தின் அடித்தளத்தில் நீங்காமல் இருந்துவரும் பெரிய மனக்குறை - நான் ஆணாகப் பிறக்கவில்லையே என்பதே ஆகும். கூடுமான வரையில் பிள்ளைப்பிராயத்திலேயே ஓர் ஆண் பிள்ளையைப் போலவே நடந்துகொள்ள முயல்வேன். திரைப்படத்துறையில் பணியாற்றத் தொடங்கிய ஆரம்ப காலத்திலும் அதே உணர்வு தொடர்ந்து இருந்தது..." என்று பின்னாளில் எழுதி இருக்கிறார்.

இனி ஆண் பிள்ளையாக மாற முடியாது. ஆனால், ஆண் பிள்ளை போன்ற வேடத்தில் நடிக்க முடியும் தானே...? Tom - Boy போன்ற கதாபாத்திரத்தில் நடிக்க ஏங்கியவருக்கு, தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. 'ரகசிய பொலிஸ் 115' படத்தில் அப்படியான வேடம்.

**'கடிந்துகொண்ட எம்.ஜி.ஆர்.!'**

'ரகசிய பொலிஸ் 115' திரைப்படத்தில் ஜெயலலிதாவுக்கு டாம் பாய் மாதிரி ரவுடித்தனமாக அட்டகாசம் செய்து நடிக்கும் வேடம். அந்தப் படத்தின் இயக்குநர் பந்தலுவுக்கு, ஒருநாள் உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. அதனால், அந்தக் காட்சியை எம்.ஜி.ஆர். இயக்கி இருக்கிறார். அன்று, ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் ஏறத்தாழ ஆண் பிள்ளையைப்போலவே இருந்திருக்கின்றன. இதைக்கண்ட எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவைத் தனியாக அழைத்து, "அம்மு... ஒரு விடயத்தை மறந்து விடாதே! நீ அணிந்திருக்கும் உடை மட்டுமே ஆணின் உடையே தவிர, நீ ஏற்றி இருக்கும் வேடம் கதாநாயகியின் வேடம் தான்...." என்று அறிவுறித்தி உள்ளார். இதைப் பின்னாளில் பகிர்ந்த ஜெயலலிதா, "ஆண் பிள்ளையாக பிறக்க வேண்டும் என்ற ஆசையை, நான் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், இவ்வாறாக வெளிப்படுத்தி இருக்கிறேன்" என்று கூறியுள்ளார்.




இதுபோல இன்னொரு சம்பவமும் அவருக்குத் திரைத்துறையில் நிகழ்ந்திருக்கிறது. அந்தச் சம்பவத்தின் பின்தான் தன் துடுக்குத்தனம் மாறியதாக ஜெயலலிதாவே குறிப்பிடுகிறார். அது மட்டுமல்லாமல், எம்.ஜி.ஆருக்கு மிகுந்த கோபம் வரும் என்பதையும் அந்தச் சம்பவம் தான் தனக்கு உணர்த்தியது என்று பின்னாளில், 'எனக்குப் பிடித்த வாத்தியார்' என்ற தொடரில் குறிப்பிட்டுள்ளார்.

இதுதான் அந்தச் சம்பவம். அது, 'முகராசி' திரைப்படத்தின் படப்பிடிப்பு. அதன் இயக்குநர் எம்.ஏ. திருமுகம், ஏதோ சில காரணங்களால் ஒருநாள் படப்பிடிப்புக்கு வரவில்லை. அந்தக் காட்சியை எம்.ஜி.ஆர். இயக்கி இருக்கிறார். அன்றைய காட்சியில், எம்.ஜி.ஆர். கோபமாக நடந்துசெல்ல, ஜெயலலிதா அவர் பின்னால், 'அத்தான்... நில்லுங்கள்! போகாதீர்கள்...' என்று அழுதவாறே அவரைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டும். எம்.ஜி.ஆர். அந்தக் காட்சியை இயக்க ஆயத்தமாகிறார். அந்தக் காட்சிக்கான ஒத்திகை நடக்கிறது. மாரிமுத்து என்ற உதவி இயக்குநர் எம்.ஜி.ஆராக ஒத்திகையில் நடிக்க... அவர் பின்னால் ஜெயலலிதா வசனங்களை உச்சரித்துக் கொண்டு போக வேண்டும். ஆனால், ஜெயலலிதா, விளையாட்டாகச் சிரித்துக் கொண்டே அந்த ஒத்திகையில் நடித்துள்ளார். இதைக் கண்ட எம்.ஜி.ஆர். மிகவும் கோபமாக, "என்ன சிரித்தாகிவிட்டதா... விளையாட்டெல்லாம் முடிந்து விட்டதா... இனிமேல் ஒழுங்காக ஒத்திகை பார்க்கலாமா... இங்கே வேலை பார்க்க வந்தோமா, இல்லை விளையாட வந்தோமா..." என்று கடிந்து கொண்டிருக்கிறார்.

முதன்முதலாக எம்.ஜி.ஆர்., இந்த அளவுக்கு கோபப்பட்டது ஜெயலலிதாவுக்கு அதிர்ச்சியாக இருந்திருக்கிறது. அன்று படப்பிடிப்பு முடிந்தவுடன் எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவிடம், "கோபமா பேசிட்டேன்லே...? எனக்குத் தெரியும் வேணும்னு நீ அப்படி நடந்துக்கலை. நீ சின்னப் பொண்ணு... காலேஜ்ல தோழியரோடு சிரித்து விளையாட வேண்டிய வயசுல இங்க வந்து கஷ்டப்படுற" என்று ஆறுதல் சொல்லி இருக்கிறார்.

இதை ஏன் இந்த அத்தியாயத்தில் குறிப்பிடுகிறேன் என்றால்... ஜெயலலிதாவுக்கும் எம்.ஜி.ஆருக்குமான உறவு இத்தகையானதாகத்தான் இருந்திருக்கிறது. மற்றவர்களிடம் கோபப்படுவதுபோல, அவரால் முழுமையாக ஜெயலலிதாவிடம் கடிந்து கொள்ள முடியவில்லை. ஜெயலலிதாவே தவறு செய்திருந்தாலும், இவ்ர இறங்கி வந்திருக்கிறார். இல்லை, ஜெயலலிதா கண்ணீர்விட்டால் துடித்துப்போய் இருக்கிறார். ஒவ்வொரு முறையும் இதுதான் நிகழ்ந்திருக்கிறது.

சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம் தானே...? ஜெயலலிதா மன்னிப்புக் கேட்டு கடிதம் எழுதினார் என்று. அதன் பின்னால் எம்.ஜி.ஆரின் மனம் கரைந்திருக்கிறது. ஜெயலலிதாவிடம் சகஜமாகப் பேசத் தொடங்கி இருக்கிறார். ஆனால், ஜெயாவுக்கு கட்சியில் எந்தப் பெரிய பொறுப்பையும் வழங்கவில்லை.



இப்படியாக நாட்கள் சென்றுகொண்டிருக்க... அ.தி.மு.கவில் தனக்குப் பின்னால் யார் என்று குறிப்பிடாமலேயே டிசெம்பர் 24, 1987 எம்.ஜி.ஆர். மரணிக்கிறார்.

**'அவமானங்களை சந்தித்த ஜெ.!'**

தகவலறிந்த ஜெயலலிதா ராமாவரத் தோட்டத்துக்கு விரைகிறார். ஆனால், அவர் வாசலைத் தாண்டி உள்ளே வர அனுமதிக்கப்படவில்லை. அதற்குள் எம்.ஜி.ஆரின் உடல், மக்களின் பார்வைக்காக ராஜாஜி ஹாலுக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. அவர், உடனே அங்கு விரைகிறார். அங்கும் இதே நிலைதான். எப்படியோ... உள்ளே நுழைகிறார். எம்.ஜி.ஆர். உடலுக்கு அருகே அமர்ந்துகொள்கிறார். ஏறத்தாழ 21 மணி நேரம் எங்கும் நகராமல், அங்கேயே அமர்ந்துகொள்கிறார். எம்.ஜி.ஆருக்கும் ஜெயலலிதாவுக்கும் மனவருத்தங்கள் இருந்தது எதுவும் ரசிகர்களுக்குப் பெரிதாகத் தெரியாது. தனக்கும் எம்.ஜி.ஆருக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்று காட்டிக்கொள்ள வேண்டிய தேவை ஜெயலலிதாவுக்கு இருந்தது. அதனால், எம்.ஜி.ஆரின் தலைமாட்டிலேயே உட்கார்ந்துகொள்கிறார்.

ஆனால், அவரை அங்கிருந்து வெளியே அனுப்பச் சிலர் தங்களால் ஆன அனைத்து கைங்கரியங்களையும் கட்டவிழ்த்து விடுகிறார்கள். ஜெயலலிதாவைக் கிள்ளுகிறார்கள் அவர், பாதங்களை கீறுகிறார்கள். ஆனால், ஜெ கொஞ்சமும் அசைந்து கொடுக்கவில்லை. அவர், எம்.ஜி.ஆரையே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருக்கிறார். இனி தன் நிலை என்ன... என்பது மட்டும் அவர் சிந்தனையாக அப்போது இருந்திருக்க வேண்டும்.

(தொடரும்)

# நான் முஸ்லிம்களுக்கு எதிராக ஒருபோதும் செயற்படவில்லை

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**முஸ்லிம்களுக்கு எதிராக தான் ஒருபோதும் செயற்படவில்லை என்றும் அது தொடர்பாக எச்சந்தர்ப்பத்திலும் விரிவாக விளக்கமளிக்கத் தயார் என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



புதுவருடத்தை முன்னிட்டு முஸ்லிம் தூதுக்குழுவொன்று முன்னாள் பாதுகாப்பு செயலாளரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளரைச் சந்தித்த முஸ்லிம் தூதுக்குழுவில் முஸ்லிம் வர்த்தகர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

முஸ்லிம் பிரநிதிநிதிகள் உள்ளடங்கிய தூதுக்குழு கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத செயற்பாடுகள் மற்றும் தற்காலத்தில் முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, தான் முஸ்லிம்களுக்கெதிராக எவ்வித இனவாத செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லையென்றும் இது தொடர்பாக எச்சந்தர்ப்பத்திலும் எங்கும் விரிவாக விளக்கமளிக்க தயாராக உள்ளதாகவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-3)

## ஹொரவபொத்தானையில் கலகம் செய்த 16 ராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

ஹொரவ பொத்தானை நகரில் குழப்பம் விளைவித்த இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள ஹொரவ பொத்தானையில் புத்தாண்டை முன்னிட்டு கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி இரவு இசை நிகழ்ச்சி இடம்பெற்ற போது இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் நடந்தது.

இந்த மோதல்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில், 10 பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர்களில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரும் அடங்கியிருந்தார்.

கைது செய்யப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதேவேளை, தமது இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவத்து, ஹொரவ பொத்தானை இராணுவ முகாமைச் சேர்ந்த 5 ஆவது கஜபா படைப் பிரிவு இராணுவத்தினர் நகரில் இரண்டு இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தி கலகம் விளைவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில், 16 இராணுவத்தினர் இராணுவ பொலிஸ் துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

அதேவேளை, ஹொரவ பொத்தானை இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் தர அதிகாரி உடனடியாகவே அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இந்த இராணுவ முகாமில் பணியாற்றிய அனைத்துப் படையினரும் வேறு முகாம்களுக்கு உடனடியாக மாற்றப்பட்டுள்ளனர்.

இராணுவப் பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன நேற்று தெரிவித்துள்ளார். (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 947

Search for people, places and things

### ராஜீ

குடும்பஸ்தன்_பாடசாலை@..ரிலாக்ஸ் ப்ளீஸ்.

'சரி.. இப்ப நான் என்ன செய்யணும்'
என்கிற ஒரு வார்த்தை
போதுமானது.. பெண்களுடனான
சண்டையை முடிவுக்குக்
கொண்டுவர..

### சுயன்

இங்கே அறிவு ஐந்து தான்..
ஆனால் அன்பு அளவற்றது..




### பவான்



சிங்கம் ஒரு நாள் 18 மணிநேரம் தூங்குகிறது.
ஆனால், கழுதையோ, 18 மணிநேரம் கடுமையாக உழைக்கிறது.

கடின உழைப்பே வெற்றிக்கு மூலதந்திரம் என்றால்,
மிருகங்களின் ராஜாவாக கழுதை தான் இருந்திருக்கும்...
சிங்கம் அல்ல.

எனவே சோம்பேறியாக இருப்போம்.
இப்படி கிறுக்குத்தனமாக யோசிப்போம்...
மகிழ்ச்சியுடன் தூங்கிக்கொண்டே புத்தாண்டை
கொண்டாடுவோம்... வாழ்க வளமுடன்....

### கபிலன்



சண்டை போட்டு விட்டு
மறு நாள் எதுவும்
நடக்காதது போல் பேசும்
அன்பு கிடைத்தால்
வாழ்க்கை சொர்க்கமே.

### நிஜன்


கெட்டவனாக இருந்தாலும்
அவனிடம் காசு இருந்தால்
இந்த சமூகம் அவனை
கடவுளாக மதிக்கிறது



நல்லவனாக இருந்தாலும்
அவனிடம் காசு இல்லையென்றால்
இந்த சமூகம் அவனை
மனிதனாகவே மதிப்பதில்லை

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி




கடமை நிறைவேற்று அதிபர்களை பணி நீக்கம் செய்வது என்ற வேலையை நாட்டின் எந்த மாகாணமும் செய்யாதபோதும் வடக்கு மாகாணம் அதைச் செய்து முடித்தது.

இப்போது கடமை நிறைவேற்று அதிபர்களை பணிநிலை விடுப்பு செய்தாயிற்று. இதன் பின்பு கடமை நிறைவேற்று அதிபர்கள் சத்தியக் கடதாசி முடிப்பதால் என்ன பயன் என்று கேட்பவர்களும் இருப்பார்கள்.

உண்மையில் கடமை நிறைவேற்று அதிபர்களின் இச்சத்தியக் கடதாசி என்பது கடமை நிறைவேற்று அதிபர்கள் மீளவும் பதவி கேட்டோ அன்றி நீதி கேட்போரல்ல.

மாறாக வடக்கு மாகாண சபையின் நிர்வாகம் எப்படிப் போகிறது என்பதை எங்கள் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இப்படியே நிலைமை போகுமாக இருந்தால் எங்கள் இனத்தின் எதிர்காலம் எப்படியாகும். இன்று கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நாளை...?

ஆகவே எங்கள் மாகாணத்தின் நிர்வாகம் வினைத்திறன், விளைதிறன் உடையதாக ஆக்கப்பட வேண்டும்.

முதலமைச்சர் ஒருபுறம்; கல்வி அமைச்சர் இன்னொரு புறம்; கல்வி அமைச்சின் செயலாளர்கள் மறுபுறம் என்றால்... வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் எந்த அதிகாரமும் இல்லையென்றால் எதற்கு இவர்கள் என்ற கேள்வி எழும்.

நிர்வாகம் என்பது கட்டமைப்புக் கொண்டது. அந்தக் கட்டமைப்புக்குரிய அதிகாரங்கள் அவரவருக்கு வழங்கப்படவேண்டும். ஒருவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை அவருக்கு மேல் நிலையில் உள்ளவர் வைத்திருந்தால் நிர்வாகம் எங்ஙனம் நகரும் என்ற இந்தக் கேள்விகள் நியாயமானவை என்பதை சகலரும் ஏற்றுக்கொள்வர்.

இவை ஒரு புறம் இருக்க; 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விண்ணப்பம் கோரப்பட்டு 2015 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி நடந்த அதிபர் சேவை III போட்டிப் பரீட்சையில் 20 ஆயிரத்து 805 ஆசிரியர்கள் தோற்றினர்.

இதில் 4 ஆயிரத்து 79 பேர் சித்தியடைந்தனராயினும் நேர்முகத் தேர்வில் 3 ஆயிரத்து 859 பேர் மட்டுமே தகைமை பெற்றனர்.

இந்த 3859 என்ற எண்ணிக்கை நாடளாவிய அதிபர் ஆளணியின் எண்ணிக்கையுடன் சமப்படுத்தும் நோக்கில் செய்யப்பட்டதாகும்.

எனினும் அதிபர் சேவை போட்டிப்பரீட்சையில் பலர் சித்தியடைய சிலரே பெயிலாகிப் போயினர் என்று பொய்யுரைப்போர் கூறி வருகின்றனர்.

தவிர குறித்த பரீட்சையில் சித்தியடைந்தவர்களை வயது அடிப்படையில் ஒரு வகுப்பாயிடைக்குள் கொண்டு வரும்போது குறைந்த வயதினரே அதிபர் போட்டிப் பரீட்சையில் அதிகம் சித்தியடைந்தனர் என்ற உண்மையையும் கண்டறிய முடியும்.

வெட்டுப்புள்ளிகள் நிர்ணயிக்கப்படுகின்ற ஒரு பரீட்சையில் தகைமை பெறுதல்; தகைமை பெறவில்லை என்ற சொற்பதங்களே பயன்படுத்தப்படுவது வழக்கம். எனினும் ஒரு சிலர் தங்கள் காழ்ப் புணர்வை தீர்த்துக்கட்டி தங்களுக்குள் ஆனந்தத்தை வரவழைத்துக் கொள்வதற்காக **பெயில்** என்ற ஆங்கிலப் பதத்தை உச்சரித்தனர்.

அதிலும் குறிப்பாக அதிபர் சேவை தரம் III பரீட்சையில் சித்தியடைந்த ஒரு சிலர் மிக வேகமாகத் துள்ளிக்குதித்து தங்கள் சிறுமைத்தனத்தைக் காட்டி நின்றனர்.

இதைப்பார்த்த போது ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது.

1992 காலப்பகுதி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதியாக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் இருந்தார். அவர் வெளிவாரிப் பட்டப்படிப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்தார்.

இதற்கு உள்வாரி மாணவர்கள் பலர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

**4A=3S** இது பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தேற்றம் என்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் சுவரொட்டிகள் பரவிக் கிடந்தன.

எனினும் முற்போக்குச் சிந்தனையுடைய உள்வாரி மாணவர்கள் ஒன்றுசேர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பிக்கும் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை அவர்களின் முயற்சிக்கு ஆதரவு கொடுத்தனர்.

அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை எதிர்த்து அது தடைப்பட்டுப் போயிருந்தால், இன்று எங்கள் வடக்கு, கிழக்கு இளைஞர் யுவதிகள் பலர் பட்டப்படிப்பை பெறும் சந்தர்ப்பத்தை இழந்திருப்பர்.

அன்றைய சூழ்நிலையில் அந்த முற்போக்குச் சிந்தனையுடைய மாணவர்களின் பெருந்தன்மையை ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறோம்.

அன்று **4A** எடுத்தவர்கள் பாஸ். **3S** எடுத்தவர்கள் பெயில் என்று நினைத்திருந்தால், இன்று நாங்கள் குட்டிச்சுவராகியிருப்போம். இந்த உண்மை எதிர்காலத்திலேனும் உணரப்பட வேண்டும்.

ஆனால் இன்றைய சூழ்நிலை வேறுவிதமாக இருப்பது வேதனைக்குரியது. வெளிவாரிப் பட்டப் படிப்பில் பட்டம் பெற்றவர்கள் கூட இதை மறந்து போனது தான் வேதனைக்குரியது.

எது எவ்வாறாயினும் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு எதிராகச் செயற்படுவதுபோல ஒரு சில ஊடகங்கள் எழுதிக் கொண்டன. இதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.

உண்மையை, நீதியை, நேர்மையை நிலைநாட்ட வேண்டிய தார்மீகப் பணி கொண்ட ஊடகங்கள் ஒரு தரப்பு சார்ந்து எழுதி மறு தரப்புக்கு நீதி கிடைக்காமல் செய்வதால் என்ன பயனை அடையப் போகிறது என்பதுதான் தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் வடக்கு மாகாணக் கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி என்பது கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துவதும் இதன் பின்னணியில் யார் யார் செயற்பட்டார்கள் என்பதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு நிர்வாகம் உதவி செய்கின்றவர்களில் யார் முதலமைச்சரை தவறாக வழிப்படுத்தினர் என்பதையும் சுட்டிக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டது.

இந்த நோக்கில் உண்மைத் தன்மையும் நடுநிலைத் தன்மையும் இருக்கும் என்றும் அதில் தவறுகள் இருந்தால் அந்தத் தவறுகளைத் திருத்துவதற்கும் சம்பந்தப்பட்டவர்களின் கருத்தை வெளிப்படுத்துவதற்கும் சம்மதம் தெரிவிக்கும் உடன்பாட்டை வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் வலம்புரி நிர்வாகத்துடன் செய்துள்ளனர் என்பதால், இங்கு தரப்படும் விடயங்கள் தொடர்பில் யார்க்கு உடன்பாடு இல்லையோ அவர்கள் தங்கள் கருத்தை இப்பகுதியில் பதிவு செய்ய முடியும் என்பதை இவ்விடத்தில் மீளவும் வலியுறுத்தி சத்தியக் கடதாசியின் முக்கியமான பகுதிக்குள் நுழைகின்றோம்.

கடமை நிறைவேற்று அதிபர்களை அதிபர் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யும் பொருட்டு வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் உருவாக்கப்பட்டது.

இச்சங்கத்தின் பிரதிநிதிகள் வடக்கு மாகாணத்தின் கல்வியமைச்சர் கௌரவ த.குருகுலராஜா, கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன், மாகாணக் கல்விப் பணிப் பாளர்கள் எஸ். உதயகுமார் ஆகியோரை முதற்கட்டமாக சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது கடமை நிறைவேற்று அதிபர்களின் விடயம் பேசப்பட்டது.

இதன் போது எக்காரணம் கொண்டும் கடமை நிறைவேற்று அதிபர்களின் சேவை முடிவுறுத்தப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தந்திருந்ததுடன் இது தொடர்பான மேலதிக நடவடிக்கையின் பொருட்டு மத்திய கல்வி அமைச்சருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன் அவற்றின் பிரதிகள் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

(நாளை தொடரும்)

**புரந்தரன்**



நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் மாலை கஜமுகா சூரசங்காரம் இடம்பெற்றது போது...
(படங்கள்:-உ.சாளின்,பொ.சோபிகா)

# சிறுப்பிட்டியில் இரண்டு இளைஞர்கள் கடத்திக்கொலை 14 இராணுவத்தினருக்கு 16 ஆம் திகதி வரை மறியல்

சிறுப்பிட்டி பகுதியில் இரு இளைஞர்கள் கடத்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து குற்றச்சாட்டு பத்திரத் திரம் தாக்கல் செய்யாத காரணத்தினால் கொலை குற்றம் சாட்டப்பட்ட 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த செல்வரத்தினம் ஜெயசீலன், நாகமணி சௌந்தரராஜன் ஆகிய இளைஞர்கள் இருவர் கடந்த 1997 ஆம் ஒக்டோபர் 28 ஆம் திகதி புத்தூர் வாதரவத்தையில் அமைந்திருந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி பொலிஸாரால் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு கொலைக் குற்றம் சாட்டப்பட் பின்னர் 16 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 18 வருடங்களின் பின்னர் சட்டமா அதிபரினால் இவ்விடயம் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு மேற்குறித்த இரு இளைஞர்களையும் கொலை செய்ததன் அடிப்படையில் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடத்துமாறு யாழ்.நீதவான் நீதிமன்றுக்கும் அச்சுவேலிப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கும் யாழ்.நீதவான் நீதிமன்றால் அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டது. அதன் படி 16 இராணுவத்தினரில் 14 இராணுவத்தினர் மன்றில் ஆஜராகி விளக்க மறியில் வைக்கப்பட்டுள்ளதுடன் இருவர் கடந்த யுத்தத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் குறித்த வழக்கு யாழ்.நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. குறித்த 14 பேரும் நேற்றைய தனம் ஆஜராகியிருந்த நிலையில் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (இ-9)

# பெரியவர்களின் தவறுகள் பிள்ளைகளைப் பாதிக்கும்

## யாழ்.அரச அதிபர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

பெரியவர்கள் விடும் தவறுகள் எதிர்காலத்தில் பிள்ளைகளையே பாதிக்கும் என்பதை நாங்கள் அனைவரும் நனகு உணர்ந்து செயற்பட வேண்டும் என தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், நற்பண்புள்ள பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் முக்கிய பங்கிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

ஆறுதல் நிறுவனத்தினால ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் கோண்டாவில் கிழக்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்பள்ளிகளில் சிறந்த இணைப்பு இதுவரை இல்லை. எல்லா முன்பள்ளிகளையும் இணைத்துப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் கடந்த காலங்களில் இருந்தது. அந்த எண்ணம் நாளடைவில் இல்லாமல் போய்விட்டது. அனைத்து முன்பள்ளிகளையும் ஒன்றிணைத்து மாகாண மட்டத்தில் செயற்படுவது இன்றைய காலத்தின் தேவை.

பெற்றோர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனரோ அதனை அவதானித்தே பிள்ளைகள் செயற்படுகின்றார்கள். சிலவேளைகளில் பெற்றோர்கள் இவ்வாறு தான் செயற்பட வேண்டும் எனக் கூறினாலும் தங்களுடைய ஆசிரியர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கூடுதலான பயிற்சிகளையும் வழங்க வேண்டிய தேவையிருக்கின்றது. முன்பள்ளிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து கட்டுக்கோப்பான அமைப்பாக இருககவேண்டும் என்பது அவசியம். சிறந்த பண்புகளை வளர்ப்பதில் பெற்றோருக்கு அடுத்தபடியாக முன்பள்ளி ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

எனவே வருங்காலத்தில் முன்பள்ளிகளிடையே சிறந்த மாற்றத்தையும் பிள்ளைகளிடையே சிறந்த எண்ணக் கருவையும் ஏற்படுத்த வேணடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# வடக்கு பதில் முதலமைச்சராக ஐங்கரநேசன் நேற்று நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பதில் முதலமைச்சராக பொ.ஐங்கரநேசன் நேற்றைய தினம் பதவியேற்றுக்கொண்டார். வடக்கு மாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளிநாடுக்கு பயணமாகியதை அடுத்தே அவர் பதில் முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் லண்டன் மற்றும் கனடா நாடுகளுக்கு செல்வதற்காக பயணமாகியுள்ளார். லண்டனுக்கு தனிப்பட்ட பயணம் மேற்கொள்ளும் முதலமைச்சர் பின்னர் கனடா மார்கம் நகரில் முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடவுள்ளார்.

நேற்று இலங்கையிலிருந்து பயணமாகியுள்ள முதலமைச்சர் எதிர்வரும் 19 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

இந்த நிலையில் பதில் முதலமைச்சராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பதவியேற்றுக்கொண்டார். நேற்றைய தினம் 11.45 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினால்ட் குரே முன்னிலையில் அரசியல் அமைப்புக்கு அமைவாக பதவியேற்றுக் கொண்டார்.


இதேவேளை வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் ப.டெனிஸ்வரன் மற்றும் சில உறுப்பினர்களும் வெளிநாட்டுக்கு பயணமாகவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# 41 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி குடாரப்பு பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் 41 பேருக்கு யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவு சங்கத்தினால் கற்றல் உபகரணங்கள் கடந்த 30 ஆம் திகதி வழங்கப்பட்டன. இதேவேளை கடந்த 23 ஆம் திகதி யாழ். மாவட்ட பாரவூர்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் 100 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (இ-9)




வல்வெட்டித்துறை கலை, கலாசார இலக்கிய மன்றத்தின் 7 ஆவது கலை இலக்கியப் பெருவிழா கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சமயத் தலைவர்கள் ஆசியுரை வழங்குவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக சமூகவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் நெய்தல் இதழினை வெளியிட்டு வைப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.



# சிறுவர் அரங்கம்

## மர்ம பங்களா

...என் குடும்பம் தலைமுறை தலைமுறையாக சொத்து பத்து ஏதும் இல்லாமல் அல்லோல பட்டு வாழ்ந்து வந்தோம். பிரிட் டிஷ் ஆட்சி காலத்திலே என் தாத்தா ஆங்கிலேயனால் துன் புறுத்த பட்டு வாழ வழி இன்றி உடுத்த உடை இன்றி இருந்து மாண்டனர். நானும் அப்படியே இருந்து விட கூடாது என்பதற்காக பல வேலைகள் செய்து வந்தேன். அதுவும் என் ஆடம்பர ஆசை க்கு போதவில்லை. ஆகவே நகை பணம் ஆபரணங்கள் டைமோண்ட் போன்ற விலை உயர்ந்த பொருட்களை கூலிக்கு ஆள் வைத்து கொள்ளை அடித்தேன். அடித்த பொருட்களை பத்திரமாக வைக்கவும் கூலி ஆள்கள் வசிக்க ஒரு பங்களாவை தேவைபட்டது. அதான் பாழடைந்த இந்த பங்களாவை சுத்தி வளைத்து போட்டு விட்டேன். ஊர் மக்கள் நான் சொல்வதை நம்புவதற்காக ஊர் தலைவர் பொறுப்பையும் ஏற்று கொண்டு விட்டேன். யாருக்கும் கடத்தல் வேலை நடப்பது தெரிய கூடாது என்பதற்காக பங்களாவுக்குள் பேய் பிசாசு, காத்து கருப்பு நடமாட்டம் இருக்கிறது என்று ஒரு வதந்தியை தட்டி விட்டேன். ஊர் மக்கள் உள்ளே நுழையாமல் இருக்க பயத்தை ஏற்படுத்தினேன்.



அதையும் மீறி பள்ளிக்கூட நண்பர்கள் நால்வர் உள்ளே நுழைந்து நடப்பதை அனைத்தையும் அதி ஒருவன் பார்த்து விட்டான். அவனை மர்மமான முறையில் அடித்து கொன்று விட்டு மற்ற மூவரையும் பேய் செய்ததை போல பயமுறுத்தி ஊரை விட்டே குடும்பத்தோடு ஓட செய்தேன்.

கால்வின் இதை எல்லாம் கேட்டு விட்டு ஊர் மக்களிடம் இனிமேலாவது மூட நம்பிக்கைகளை நம்பாமல் புத்திசாலித்தனமாக இருங்கள். ஏதாவது யாரவது சொன்னால் அது உண்மை தானா என்று ஆராயுங்கள், உடனே நம்பி விடாதீர்கள்.

என் முன்னோர்கள் கட்டிய இந்த பங்களாவை ஊர் மக் களுக்காக பயன் பட பாலர் பள்ளியாக உபயோக படுத்த அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கிறேன் என்றான் கால்வின். ஆங்கிலேயர்கள் சுதந்திரம் தந்தது என்னவோ உண்மைதான். இப்பொழுது எதிரியாகவும் அடிமையாகவும் ஆக்குவதெல்லாம் சொந்த மண்ணில் பிறந்தவர்களே. இதற்கு எப்போது சுதந்திரம் வரும்.

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2017 04

- கிமு 46 - டைட்டஸ் லபீனஸ் ருஸ்பீனா என்ற நகரில் இடம்பெற்ற சமரில் ஜூலியஸ் சீசரைத் தோற்கடித்தார்.
- 1493 - கொலம்பஸ் தான் கண்டுபிடித்த புதிய உலகை விட்டுப் புறப்பட்டார்.
- 1847 - சாமுவேல் கோல்ட் தனது முதலாவது சுழல் துப்பாக்கியை அமெரிக்கஅரசுக்கு விலைக்கு விற்றார்.
- 1854 - கப்டன் வில்லியம் மக்டொனால்ட் என்பவர் மக்டொனால்ட் தீவுகளைக் கண்டுபிடித்தார்.
- 1878 - சோஃபியா நகரம் ஒட்டோமான் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றது.
- 1884 - ஃபாபியன் அமைப்பு லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1889 - இலங்கையில் சபரகமுவா மாகாணம் என்ற புதிய மாகாணம் சேர் ஈ. என். வோக்கர் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- 1896 - யூட்டா 45வது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது.
- 1912 - பிரித்தானியக் காலனித்துவ நாடுகளில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948 - பர்மா ஐக்கிய இராச்சியத்திலிருந்து விடுதலை பெற்றது.
- 1951 - சீனா மற்றும் வட கொரியப் படைகள் சியோல் ந்கரைக் கைப்பற்றின.
- 1958 - 14 வயது பொபி ஃபிஷர் ஐக்கிய அமெரிக்காவின் சதுரங்க சம்பியன் போட்டியில் வெற்றி பெற்றார்.
- 1958 - முதலாவது செயற்கைக் கோள் ஸ்புட்னிக் 1 தனது சுழற்சிப் பாதையை விட்டு விலகி பூமியில் வீழ்ந்தது.
- 1959 - லூனா 1 சந்திரனுக்கு மிக அண்மையில் சென்ற விண்கலம் ஆனது.
- 1990 - பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் பயணிகள் தொடருந்து ஒன்று சரக்கு தொடருந்துடன் மோதியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998 - அல்ஜீரியாவில் மூன்று வெவ்வேறு நிகழ்வுகளில் 170 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2004 - ஸ்பிரிட் என்ற நாசாவின் தரையுளவி செவ்வாயில் தரையிறங்கியது.

### பிறப்புக்கள்

- 1643 - ஐசாக் நியூட்டன், ஆங்கிலேய இயற்பியலாளர், கணிதவியலாளர். (இ. 1726ஃ27)
- 1809 - லூயி பிரெயில், பார்வையற்றவர்களுக்கான பிரெயில் எழுத்தைக் கண்டுபிடித்த பிரான்சியர். (இ. 1852)
- 1813 - ஐசக் பிட்மன், ஆங்கிலேய மொழியியலாளர். (இ. 1897)
- 1889 - பதஞ்சலி சாஸ்திரி, இந்தியாவின் 2வது தலைமை நீதிபதி. (இ. 1963)
- 1892 - ஜே. சி. குமரப்பா, தமிழகப் பொருளியலாளர் . (இ. 1960)
- 1940 - பிறையன் ஜோசப்சன், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய இயற்பியலாளர்.
- 1941 - க. துரைரத்தினசிங்கம், இலங்கை அரசியல்வாதி.
- 1963 - மே-பிரிட் மோசர், நோபல் பரிசு பெற்ற நோர்வே உளவியலாளர், நரம்பணுவியலாளர்.
- 1964 - பிரபா கணேசன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி.
- 1984 - ஜீவா, தமிழ்த் திரைப்பட நடிகர்.

### இறப்புகள்

- 1908 - சார்லசு அகத்தசு யங், அமெரிக்க வானியலாளர். (பி. 1834)
- 1941 - என்றி பெர்குசன், நோபல் பரிசு பெற்ற பிரான்சிய மெய்யியலாளர் . (பி. 1859)
- 1960 - அல்பேர்ட் காம்யு, நோபல் பரிசு பெற்ற பிரான்சிய எழுத்தாளர். (பி. 1913)
- 1961 - எர்வின் சுரோடிங்கர், நோபல் பரிசு பெற்ற ஆத்திரிய இயற்பியலாளர் . (பி. 1887)
- 1994 - ராகுல் தேவ் பர்மன், இந்திய இசையமைப்பாளர். (பி. 1939)
- 2004 - வசுமதி இராமசாமி, இந்திய எழுத்தாளர். (பி. 1917)
- 2005 - கிருஷ்ணா வைகுந்தவாசன், இலங்கை சட்டத்தரணி, தமிழ் ஆர்வலர், தொழிற்சங்கவாதி. (பி. 1920)
- 2010 - சுடோமு யாமகுச்சி, சப்பானியப் பொறியியலாளர் . (பி. 1916)

### சிறப்பு நாட்கள்

- விடுதலை நாள் .(மியான்மர், 1948)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 50 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 100 | 20 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 100 | 100 | 120 | 200 | 200 |
| தக்காளி | 180 | 100 | 120 | 160 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 70 | 60 | 70 |
| கோவா | 20 | 60 | 20 | 30 | 40 | 40 |
| கரட் | 80 | 60 | 80 | 90 | 120 | 80 |
| பூசணி | 60 | 60 | 35 | 50 | 60 | 50 |
| புடோல் | 70 | 60 | 50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 20 | 80 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 280 | 400 | 200 | 280 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 80 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 200 | 150 | 120 | 120 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 90 | 120 | 80 |
| பீற்றூட் | 50 | 100 | 40 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 180 | 300 | 180 | 170 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 600 | 300 | 450 | 400 | — |
| போஞ்சி | 100 | 120 | 60 | 100 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 20 | — | 30 | 30 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 50 | 15 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 40 | 20-40 | 35 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 100 | 180 | — | 240 | 280 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 40 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 15 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 150 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 60 | 100 | 60 |

நந்த வனத்தில் ஓர் ஆண்டி
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி
அதைக் கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி
– சித்தர் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாகாண சபை அமர்வுகளை பெறுமதியாக ஆக்குங்கள்

வடக்கு மாகாண சபையின் அமர்வுகள், உறுப்பினர்கள் ஆற்றுகின்ற உரைகள், எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பில் ஓர் ஆரோக்கியம் இருப்பதாகத் தெரியவில்லை.

வடக்கு மாகாண சபையின் ஆரம்ப கட்டப் போக்குகள் திருப்தி இல்லாமல் இருந்தபோதிலும் அனுபவக்குறைவின் காரணமாக உறுப்பினர்கள் சபை அமர்வுகளை பெறுமதியாக்கத் தவறுகின்றனர் எனக் கருதப்பட்டது.

எனினும் காலநகர்வில் அனுபவமும் முதிர்வும் ஏற்பட வடக்கு மாகாண சபையின் இயங்கு நிலை சிறப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த எதிர்பார்ப்பு நம்பிக்கைக்குரியதாக அமையவில்லை என்பதே உண்மை.

வடக்கு மாகாண சபையில் சில உறுப்பினர்கள் ஆற்றுகின்ற உரைகளைப்பார்க்கும் போது அவர்களிடம் ஒரு தெளிவின்மை இருப்பது தெரிகின்றது. அது மட்டும் அன்றி கூற வந்ததை தெளிவாக கூறுவதில் இருக்கக்கூடிய இடர்பாடுகள் என்பனவும் சபை அமர்வுகளின் கனதியை குறைத்துவிடுகின்றது.

தவிர, ஒவ்வொரு அமர்விலும் முரண்படுவதும் எதிர்வாதம் புரிவதுமே வழமையாக அமையும் போது, எந்த முடிவையும் எடுக்க முடியாமல் போகின்றது.

உண்மையில் வடக்கு மாகாணம் சமூக, பொருளாதார அரசியல் கட்டமைப்புகளை கட்டியெழுப்பப் பாடுபட வேண்டும். முதலமைச்சர், சபைத் தலைவர், அமைச்சர்கள், உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் எங்கள் தமிழ் மண்ணில் எத்தனை அபிவிருத்தித் திட்டங்களை, சமூக நலத்தொண்டுகளை, விவசாய உற்பத்தி அதிகரிப்புக்களை, கடல் வள உற்பத்திகளை மேல் எழச் செய்யலாம் எனச் சதா சிந்திக்க வேண்டும்.

இதைவிடுத்து சிறு சிறு விடயங்களை முன்வைத்து அதனோடு நேரத்தை செலவிட்டால், தமிழ் மக்களின் நிலைமை என்னாவது என்றாகிவிடும்.

உண்மையில் வடக்கு மாகாண சபையின் பணியில் பெரும்பகுதி வடக்கு மாகாண மக்களின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி என்பனவாகவே இருக்க வேண்டும். ஆனால் அவற்றின் மீது காணப்படும் அக்கறைப்பாடுகள் போதாமல் உள்ளமை பெருங் குறைபாடாகும்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றபோது தமிழ் மக்கள் அதில் பங்கேற்று வாக்களித்த ஆர்வம் கண்டு அதிசயிக்காதவர் இல்லையென்று சொல்லலாம்.

ஆனால் ஆர்வத்தோடு வாக்களித்து தமிழ் அரசை வடக்கில் நிலைநிறுத்திய போதிலும் அதில் எந்த நன்மையும் ஏற்படவில்லை என்று மக்கள் நினைக்கும் அளவில் நிலைமை வந்துவிட்டது.

இத்தகைய சூழ்நிலை சாதாரண பிரதேச சபைகள் போலவே மாகாண சபையும் என்றாகிவிடும்.

உண்மையில் தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய உள்ளூராட்சி சபைகளை பொறுப்பேற்ற ஆட்சித்தரப்பினர் அவற்றை முழுமையாக பழுதாக்கி விட்டனர். இதனால் பிரதேச, நகர, மாநகர சபைகள் அதிகாரிகள் மட்டத்தில் இயங்கினாலே அது போதும் என்று மக்கள் நினைக்கின்றனர்.

இந்த நினைப்புக் காரணமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ் மக்கள் ஆர்வம் காட்டாமல் இருப்பதுடன் அதில் பங்கேற்கவும் முன்வர மறுக்கின்றனர்.

இதற்குக் காரணம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி சபை நிர்வாகம் ஆரோக்கியமாக எதனையும் செய்யாமையாகும்.

எனவே, உள்ளூராட்சி சபைபோன்ற ஒரு தோற்றப்பாட்டை வடக்கு மாகாண சபையிலும் கொண்டு வந்தால் தமிழருக்கான உரிமை என்பது எதுவுமாகாது என்றாகிவிடும். எனவே வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தமக்கு வாக்களித்த தமிழ் மக்களின் நல்வாழ்வுக் காக பாடுபட திடசங்கர்ப்பம் பூணவேண்டும்.

# பௌத்த விகாரைகளின் அபிவிருத்திக்கு 107 மில்லியன் ரூபாய் நிதியுதவி

சிறந்ததோர் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு சட்டத்தினால் மட்டும் முடியாது எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, அதற்கு பௌதத தத்துவம் பெரும் பலமாக உள்ளது எனத்தெரிவித்தார்.

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் அபிவிருத்திக்கு நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். விகாரைகளின் அபிவிருத்திக்கு பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தின் கீழ் 107 மில் லியன் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டது.

பௌத்த சாசனத்தின் மேம்பாட்டுக்காக அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி இலங்கை தாய்நாட்டை ஒரு சிறந்த நாடாகக் கட்டியெழுப்புவத ற்கு மகாசங்கத்தினர் வழங்கும் தலைமைத்துவத்தை நன்றியுடன் நினைவு கூர்ந் தார். (இ-3)

# வாழ்க்கைக்கான கல்வியும் இலத்திரனியல் கற்கையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகத்தின் கல்வியியற் சொற் பொழிவும் கலந்துரையாடலும் வாழ்க்கைக்கான கல்வியும் இலத்திரனியல் ஊடான கற்கையும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள நோத் லங்கா IIT சர்வதேச பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்.

லண்டன் பல்கலைக் கழக கல்வியியல் ஆய்வாளர் வழிகாட்டி பேராசிரியர் கலாநிதி Bridge Somekh இந்நிகழ்வில் சொற் பொழிவாற்றுவார்.

கல்வியியல் ஆய்வுத் துறையில் - ஈடுபட்டுள்ளோர், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்து பயனடையலாம்.

மேலும் இலவசமாக நடைபெறும் இந் நிகழ்வில் தமிழ் மொழி பெயர்ப் பும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

# சமாதான பேச்சுவார்த்தை இரத்து போராளிகள் குழு அறிவிப்பு

சிரியாவில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய வகையில் அரசுப் படைகள் தாக்குதல் நடத்தி வருவதால் கஜகஸ்தானில் நடைபெறவுள்ள சமாதான பேச்சுவார்த்தையில் பங்கேற்கமாட்டோம் என அந்நாட்டின் முக்கிய போராளிகள் குழு அறிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களின் படைகளுக்கும் இடையே கடந்த 2011 ஆம் ஆண்டு, மார்ச் 15 ஆம் திகதி உள்நாட்டுப்போர் தொடங்கியது. தொடர்ந்து 6 ஆவது ஆண்டாக நடைபெற்று வரும் இந்த உள்நாட்டுப் போரில் 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். பல இலட்சம்பேர் வீடுகளை விட்டு, உயிர் பிழைக்க இடம் பெயர்ந்தனர்.

இந்த நிலையில் ரஷ்யா, துருக்கி ஆதரவுடன் இரு தரப்புக்கும் இடையே கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இது உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டு வந்து, அரசியல் தீர்வு காண்பதற்கு உண்மையான வாய்ப்பாக அமையும்" என சிரியா அரசு கூறியுள்ளது.

இந்த போர் நிறுத்தம் டிசெம்பர் 29 ஆம் திகதி இரவில் இருந்து அமுலுக்கு வந்தது. போராளி குழுக்கள் மற்றும் சிரியா அரசு பிரதிநிதிகளிடையே இந்த மாதம் கஜகஸ்தான் நாட்டில் சமாதான பேச்சுவார்த்தை நடத்தவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

ரஷ்யா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் இந்த முயற்சியை ஆதரித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் கடந்த முதலாம் திகதி தீர்மானம் கொண்டு வரப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

'சிரியாவில்வன்முறையை முடிவுக்கு கொண்டுவரவும், அரசியல்ரீதியான தீர்வு காணவும் ரஷ்யா மற்றும் துருக்கி எடுத்துள்ள இந்த முயற்சிகளை வரவேற்று, ஆதரிக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ள இந்த தீர்மானத்தை ஆதரித்து, ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளும் வாக்களித்தன.

இதற்கிடையில், சிரியா தலைநகர் டமாஸ்கஸ் பகுதிக்கு குடிநீர் விநியோகத்துக்கு மூலாதாரமாக இருக்கும் முக்கிய நீரருவிகளின் ஊற்றுக்கண் கருவாகும் பல பகுதிகளை போராளிகளின் பிடியில் இருந்து மீட்பதற்காக அரசுப்படைகள் ஆங்காங்கே தாக்குதல் நடத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்து வருகிறது.

இதைத் தங்களுக்கு் சாதகமாக்கி கொண்டு சமாதான பேசசுவார்த்தையில் பங்கேற பதை தவிர்க்க சில போராளி குழுக்கள் முயற்சித்து வருகின்றன.

இந்நிலையில், அரசுப் படைகளும் அதன் ஆதரவுப் படைகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இடையிலும் போராளிகள் மீது பெரிய அளவிலான தாக்குதல் நடத்தி வருவதால் கஜகஸ்தான் நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தையில் நாங்கள் பங்கேற்க மாட்டோம் என அந்நாட்டின் மிகப்பெரிய போராளிகள் குழுவான 'சிரியாவை விடுவிப்போம் என்ற அமைப்பு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. (இ-3)

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய திட்டம் வழங்கத் தீர்மானம்

இவ்வருடத்தில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விசேட ஓய்வூதிய திட்டம் வழங்கவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாயப்பு பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டு புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக விசேட ஓய்வூதிய திட்ட்ம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

மேலும் வெளிநாடுகளில் கடந்த காலங்களில் குடியேறிய தொழிலாளர்கள் மற்றும், இவ்வருடம் வெளிநாடுகளை நோக்கி குடிபெயரும் பணியாளர்களின் நலத்திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் போன்ற விடயங்கள் நடைமுறைப்படுததவுள்ளதாக இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன் கிழமை **யாழ்.பிரதேசத்தில** வறுத்தலைவிளான், வீமன் காமம், காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன் துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படை முகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு கால விடுதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** தெற்கிலுப்பைக்குளம் கிராமத்திலும் **மன்னார் பிரதேசத்தில** ஓலைத்தொடுவாய், சாந்திபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## பக்குவம் பெற்றால் துன்பம் இல்லை



✦ மக்களில் பலர் புகழ் வேண்டியோ அல்லது புண்ணியம் பெற வேண்டியோ தர்மம் செய்கின்றனர். அத்தகைய செயல்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை.

✦ பரோபகாரம் செய்பவர்கள் இறைவனுக்காக மட்டுமே செய்வதே சிறந்ததாகும். இறைவனுடைய நியதியில், உலகில் உள்ள அனைத்து விடயங்களுக்கும் இடமுண்டு. அதனால், நம்முடைய கொள்கை தான் சிறந்தது. மற்றவர்கள் கொள்கைகள் தப்பானவை என்று எண்ணம் கொள்வது கூடாது.

✦ பிறருக்குப் போதிப்பது சுலபமல்ல. ஒருவன் வாழ்வில் இறைவன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற பின்னரே பிறருக்குப் போதனை செய்ய முன்வர வேண்டும். அப்போது தான் அது நல்ல பயனைப் பிறருக்குத் தரும். மனிதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அவனைப் பெரிதும் பாதிக்கின்றன.

✦ அதனால் தெய்வீகப் படங்களை, நாம் இருக்குமிடத்தில் எப்போது கண்ணில் படும் வகையில் வைத்திருப்பது நல்லது. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் நம் மனதில் அருள் உணர்வு உதிக்கத் தொடங்கும். செடி பெரிய மரமான பிறகு, அதற்கு வேலி தேவையில்லை. ஒரு யானையைக் கூட அதில் கட்டி வைக்கும் அளவிற்கு வலிமை அந்த மரத்திற்கு உண்டாகி விடும்.

✦ அதைப் போல பக்குவம் உண்டான மனிதனுக்கும் உலக விடயங்கள் எந்த இன்னலையும் உண்டாக்குவதில்லை.

# கொம்மாந்துறை இளைஞர்கள் வி.கழகம் நடத்திய மென்பந்தாட்டத் தொடர்

## கொக்குவில் AB, பிரம்படி சம்பியன்





கொம்மாந்துறை இளைஞர்கள் விளையாட்டுக் கழகம் நடத்திய வட மாாணத்தின் மிகப் பெரிய மென்பந்தாட்டத் தொடரில் கொக்குவில் AB விளையாட்டுக் கழகமும் பிரம்படி விளையாட்டுக் கழகமும் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றின.

அணிக்கு 8 பேர் 5 ஓவர்கள் கொண்ட போட்டியில் கொக்குவில் AB விளையாட்டுக் கழகமும் 12 ஓவர்கள் கொண்ட போட்டியில் பிரம்படி விளையாட்டுக் கழகமும் கிண்ணத்தை சுவீகரித்தது.

இறுதி போட்டியின் பிரதம விருந்தினராகப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக சித்தார்த்தன், சுகிர்தன், சிவாஜிலிங்கம், சிவயோகன், கிராம சேவகர்கள் ,பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

கொம்மாந்துறை இளைஞர்கள் விளையாட்டுக் கழக மூன்றாவது வருடமாக மேற்படி மென்பந்தாட்ட தொடரை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## யங்கம்பன்ஸ் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யங்கம்பன்ஸ் பிறீமியர் உதைப்பந்தாட்ட லீக் தொடரில் 1.1.2017 அன்றைய உதைப் பந்தாட்டத் தொடரின் முதல் போட்டியில் jolly boys எதிர்த்து young boys அணி மோதியது. இப் போட்டியில் 5:3 என்ற கோல் வித்தியாசத்தில் jolly boys அணி வெற்றியீட்டியது.

jolly boys அணி சார்பாக பிரகாஷ்-2, மகிந்தன் -1 அஜய் குமார் -1 கோல்களைப் போட்டனர்.

young boys அணி சார்பாக விமல் -2, பார்த்தீபன் -1 கோல்களைப் போட்டனர்.

இரண்டாவது போட்டியில் Rock star எதிர்த்து jolly boys அணி மோதியது. இப்போட்டியில் 3:2 என்ற கோல் வித்தியாசத்தில் Rock star அணி வெற்றியீட்டியது.

Rock star அணி சார்பாக ரதன்-3 கோலினையும் jolly boys அணி சார்பாக பிரகாஷ் -2 கோலினையும் போட்டனர்.

மூன்றாவது போட்டியில் young boys எதிர்த்து Super king மோதியது 2:1 என்ற கோல் வித்தியாசத்தில் young boys வெற்றியீட்டியது.

young boys அணி சார்பாக விமல் -1, நிறோ -1 கோல் போட்டனர். Super king அணி சார்பாக தர்சன் -1 கோல் போட்டார். (க)

## பொன்னம்பலம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்






வல்வை அணி வெற்றி


பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக நடத்தும் 7 நபர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் அண்மையில் நடை பெற்ற போட்டியில் மோதியது. வல்வை அணியை எதிர்த்து சக்கோட்டை சென் சேவியர் அணி மோதியது.

அனுபவம் குறைந்த இளம் வீரர்களுடன் களமிறங்கிய வல்வை அணி வீரர்களின் துடிப்பான வேகமான ஆட்டத்தின் மூலம் ஆட்ட நேர முடிவில் 3:1 என்ற ரீதியில் சென் சேவியர் அணியை வெற்றியீட்டியது வல்வை அணி.

ஆட்ட நாயகனாக வல்வை அணி வீரர் ஜெகதாஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)

# மெட்ரென்சவ்,வோர்னர் சதம் அவுஸ். சிறப்பான ஆரம்பம்





பாகிஸ்தானுக்கு எதிரான 3வது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் தொடக்க வீரர் டேவிட் வோர்னர் , ரென்சவ் சதம் அடிக்க முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா வலுவான நிலையில் உள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்டில் விளையாடுகிறது.

இதில் முதல் 2 டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிவிட்டது.

அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று சிட்னியில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று அவுஸ்திரேலியா முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. தொடக்க வர்ரகளாக டேவிட் வோர்னர், மெட் ரென்சவ் களம் இறங்கினார்கள்.

டேவிட் வோர்னர் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். 42 பந்தில் அரைச் சதம் அடித்த அவர் 78 பந்தில் சதம் அடித்து அசத்தினார். இதில் 17 பவுண்டரி அடங்கும்.

60 ஆவது டெஸ்டில் அவருக்கு இது 18 ஆவது சதமாகும் மதிய உணவு இடைவேளைக்கு முன்பே அவர் சதம் அடித்தது குறிப்பிடத்தக்கது.

டேவிட் வோர்னர் 113 ஓட்டங்களில் (95 பந்து) அவுட் ஆனார். அடுத்து களம் வந்த குவாஜா 13 ஓட்டங்களில் வெளியேறினார். ரென்சவ்-தலைவர் சுமித் ஜோடி சிறப்பாக விளையாடியது.

அவுஸ்திரேலியா 59 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 243 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

மதிய உணவு இடைவேளைக்கு முன்பு சதம் அடித்த 2 ஆவது அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையை வோர்னர் பெற்றார்.

இதற்கு முன்பு கிரிக்கெட் சகாப்தம் டான் பிராட்மேன் 1930 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக லீட்ஸ் மைதானத்தில் உணவு இடைவேளைக்கு முன்பு சதம் அடித்து இருந்தார்.

நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா 88 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 363 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ரென்சவ் ஆட்டமிழக்காமல் 167 ஓட்டங்கள் குவித்துள்ளார். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## பேருந்தில் அடாவடி;...

இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்தை மூளாய் வைத்திய சாலைக்கு அருகில் வைத்து மறித்து ஏறிய 5 பேர் கொண்ட குழுவினர் பேருந்தில் இருந்த ஒருவரை சரமாரியாக தாக்கியுள்ளனர்.

அத்துடன் சாரதியையும் அச்சுறுத்தி அடாவடித்தனம் செய்து கொண்டு வந்துள்ளனர். இந்நிலையில் சமாளிக்க முடியாத பேருந்து சாரதி புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அருகில் உள்ள கடற்படையினரின் காவலரண் அருகே பேருந்தை சாதுரியமாக நிறுத்தியுள்ளார்.

சத்தம்கேட்டு கடற்படையினர் பேருந்தை நோக்கி வருவதை கண்ட குறித்த அடாவடி குழுவினரில் 3 பேர் பேருந்தில் இருந்து இறங்கி தப்பி ஓடியுள்ளனர். இதன் போது தாக்குதல் மேற்கொண்டவர்களில் மீதியாக இருந்த இருவர் மற்றும் தாக்குதலுக்குள்ளானவர் ஆகியோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில் பொலிஸார் குறித்த 3 நபர்களையும் நேற்றைய தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது தாக்குதலை மேற்கொண்ட இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் சட்டத்தரணி பிணைகோரி ஆஜராகாததால் தாக்குதலுக்கிலக்கானவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது. (செ-9)

## ஒரே பிரசவத்தில்...

பிறந்துள்ளது.

அதில் நேற்று முன்தினம் மாலை இரு குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன் நேற்று மற்றொரு குழந்தையும் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

புத்தாண்டு தினத்தில் பிறந்த மூன்று குழந்தைகளும் நிறை குறைந்து காணப்பட்டதன் காரணமாக சிறுவர் (குழந்தை) சிகிச்சைப் பிரிவில் வைத்து தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி மூன்று குழந்தைகளும் உயிரிழக்க நேரிட்டுள்ளது. (செ-250)

## அமைச்சர் பைசருக்கு...

ணைந்த எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

அமைச்சர் பைஸர் முஸ்தபா மக்களின் அடிப்படை உரிமையான வாக்குரிமை பறித்துள்ளதாக குற்றம்சாட்டிய ஒன்றிணைந்த எதிர்கட்சி, அமைச்சர் உடனடியாக பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஒன்றிணைந்த எதிர்கட்சியின் பங்காளிக் கட்சியான பிவித்துரு ஹெல உறுமய ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி உதய கம்மன்பில, "தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் அசோக்க பீரிஸ் எல்லை நிர்ணய அறிக்கையினை துரிதமாக கையளிப்பதற்கான உதவிகளை அமைச்சர் பைஸர் முஸ்தபா தமக்கு வழங்கவில்லை என குற்றம் சாட்டியுள்ளார். இதன்மூலம் தேசிய எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவரின் அறிக்கை தயாரிக்கும் செயற்பாடுகளை தொடர்ந்தும் காலதாமதப்படுத்தும் நோக்கில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா செயற்படுவது உறுதியாகியுள்ளது.

அறிக்கையை துரிதகதியில் வழங்க தமக்கு அமைச்சின் உதவிகளும், ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை என்று அசோக பீரிஸ் கூறியுள்ளார். அதனால் அமைச்சர் தனது பொறுப்பிலிருந்து முறையாக செயற்படவும் இல்லை. எல்லை நிர்ணயக்குழுவின் சுயாதீனமான செயற்பாட்டிற்கு இடமளிக்கவும் இல்லை என்பதும் நிரூபணமாகிறது. அதனால் அமைச்சர் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது.

எனவே நாட்டு மக்களின் அடிப்படை உரிமையான வாக்குரிமையை பறித்த அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் தம்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டு இராஜினாமா செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அமைச்சர் பைஸர் முஸ்தபாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவருவோம் என கம்பன்பில குறிப்பிட்டார். (செ-11)

## ஊடகவியலாளரின் வீட்டில் கொள்ளை

(பரந்தன்)

ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டில் நள்ளிரவில் புகுந்த திருடர்கள் பணம், நகை என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 30ம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விசுவமடு இளங்கோபுரம் பகுதியில் வசித்து வரும் சுயாதீன ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டிலேயே திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தினத்தன்று வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது சமையலறை புகைகூட்டின் ஊடாக வீட்டிற்குள் இறங்கிய திருடர்கள் அறை ஒன்றினுள் இருந்த அலுமாரியில் வைத்திருந்த பதினைந்து பவுணுக்கு மேற்பட்ட நகைகள் மற்றும் அறுபதாயிரம் ரூபா பணம் என்பவற்றை எடுத்துக்கொண்டு வீட்டு கதவினை திறந்து வெளியேறியுள்ளனர்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைபாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு சென்று பொலிஸார் நிலைமைகளை நேரில் அவதானித்து சென்றுள்ளனர். (செ - 312)

## மாகாண சபைக்கு ...

ப்படுகின்றது. இவ்வாறான ஒரு நிலையில் காணி பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்கினால் அது நாட்டுக்கு பாரிய ஆபத்தாக அமையும்.

எனவே பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கக்கூடாது.

மேலும் புதிய அரசியலமைப்பானது நாட்டில் பிரிவினையை ஏற்படுத்துவதாகவும் தமிழ்த் தேசியக கூட்டமைப்புக்கும் சர்வதேசத்துக்கும் ஏற்ற வகையிலுமே தயாரிக கப்பட்டு வருகின்றதெனவும் விமல் குற்றஞ்சாட்டியுள்ளார். (செ-11)

## இந். மீனவர்களின் மறியல் நீடிப்பு

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்கள் எழுவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம். எம். றியால், நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த டிசம்பர் மாதம் 19ஆம் திகதி, நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 7 மீனவர்கள் இரண்டு விசைப்படகுடன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த மீனவர்களின் வழக்கு, நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மீனவர்களை விடுவிப்பதற்குரிய பரிந்துரை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கிடைக்கபெறாததன் காரணத்தினால் விளக்கமறியலில் உள்ள மீனவர்களின் விளக்கமறியலை மேலும் நீடித்து நீதவான் உத்தரவிட்டார். (செ -11)

## மகிந்த - மைத்திரி ...

னால் அளிக்கப்பட்ட ஆணை ஒரு போதும் துஷ்பிரயோகம் செய்யப்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு மகிந்தவுடன் உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ளப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரி அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலருக்கு உறுதியளித்திருந்தார் என சுட்டிக் காட்டிய ராஜித சேனாரட்ன,

மகிந்த ராஜபக்ஷவுடன் ஐக்கிய தேசியக் கட்சியினர் உறவுகளை பேணி வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் கவனம் செலுத்துமாறும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களிடம் கோரியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (செ-11)

## வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(தும்பங்கேணி - ஏறாவூர்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கான பாரிய வேலைத்திட்டங்கள் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

அம்மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க இந்த வருடத்தில் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சில் புதுவருட நிகழ்வுகள் நேற்று முன்தினம் அமைச்சர் சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் அதிகளவு தொடர்புடைய அமைச்சே மீள்குடியேற்ற, புனர்வாழ்வளிப்பு அமைச்சு யுத்தம் நிறைவடைந்தபோதிலும் அம்மக்கள் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அவர்களது கண்ணீரைத் துடைப்பதற்கு இந்த அமைச்சினால் நடவடிக்கை எடுக்க முடியும்.

வடகிழக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க இந்த வருடத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்ற அனைவரும் ஒன்றிணைந்து பணிபுரிவோம் என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சர் சுவாமிநாதன், அமைச்சின் செயலாளர் டீ.எம். அமரதுங்க, இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசு, இராஜாங்க அமைச்சின் பிரத்தியேக செயலாளர் றயிஸத்தீன் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். (5)

## நீர்கொழும்பு நீதிமன்றத்தில் மொழிப் பிரச்சினையால் அவதி

### உறுப்பினர் மயூரன் அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்பு நீதிமன்ற கட்டிட தொகுதியில் தமிழ் மொழியில் பரீட்சயமாக பேசக்கூடிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் தமிழ் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், மக்களின் மொழிப்பிரச்சினையை தீர்க்கும் வகையில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை அங்கு நியமனம் செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக வட மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனுக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீர்கொழும்பு நீதிமன்ற கட்டிட தொகுதியில் தமிழ் மொழியில் பரீட்சயமாக பேசக்கூடிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் தமிழ் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அறிகின்றேன். வழக்குகளோடு சம்பந்தப்பட்ட வழக்காளிகளாக இருப்பினும், எதிராளிகளாக இருப்பினும், வழக்குத் தவணைக் காலத்திலும், வழக்குகள் முடிவடைந்த பின்னரும் அவர்கள் தமிழ் மொழியை மட்டுமே தெரிந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

சரியான மொழி பெயர்ப்பு இன்மையால் வழக்குகளின் நிலைமைகள், தன்மைகளைக் கூட அறிந்து கொள்ள முடியாமல் அவஸ்தைப்படுகின்றவர்களை காணக்கூடியதாக இருக்கின்றது.

சொந்த மொழியில் தகவல்களை பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

வேறு திணைக்களங்களிலோ, அலுவலகங்களிலோ மொழி பெயர்த்துக் கூற உதவிக்கு சிலரை அழைத்து செல்வது சுலபம்.

ஆனால் நீதிமன்றங்களில் காணப்படும் இறுக்கமான கட்டுப்பாடுகள் காரணமாக நினைத்தது போல் பொதுமக்கள் தமக்கு ஏற்ற யாரையும் அழைத்து செல்லவும் முடியாது.

தமிழ் பேசும் சட்டத்தரணிகளும் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றனர்.

எனவே தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை நியமனம் செய்து இம் மொழிப்பிரச்சினையை தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இல்லையேல் விசேடமான மொழிப்பெயர்ப்பாளர்களை நீதிமன்ற வளாகத்துக்குள் கடமையாற்ற தங்கள் அமைச்சினூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

இதில் தாங்கள் உடனடியாக எடுக்கும் நடவடிக்கையானது மொழிப்பிரச்சினையால் காரியங்களை செய்து முடிக்காமல் விடப்பட்டிருக்கும் நீண்டகால, உடனடி பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வழிசமைக்கும் என நம்புகின்றேன் என குறித்த கடிதத்தில் உறுப்பினர் மயூரனால் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-4)

## ஆட்சியை கவிழ்ப்பேன் என்பது மகிந்தவின் சதித்திட்டமாயிருக்கும்

### சிறிநேசன் எம்.பி சந்தேகம்

(செங்கலடி 2 - சித்தாண்டி)

2017ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி கூறியிருந்தால் நாங்கள் அதனை பெரிதுபடுத்தாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் ஆட்சியைக் கவிழ்ப்பேன் எனும் செய்தியானது முன்னாள் ஜனாதிபதியின் சதியோடு கூடிய வேலையாக இருக்கும் என பார்க்கத் தோன்றுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குப்பட்ட கரடியனாறு மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நேற்று அக்கினி இசைக்குழுவின் 17ஆவது ஆண்டு நிறைவையொட்டி அதன் தலைவர் எஸ். ரகுவரன் தலைமையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுப் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி ஆட்சியை கவிழ்ப்பேன் என கூறியிருக்கின்றார். 2017ஆம் ஆண்டை ஆட்சி கவிழ்ப்பு ஆண்டாக பிரகடனப் படுத்தியிருக்கின்றார்.

கடந்த கால ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி எவ்வாறு நடந்து கொண்டார் என தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்த விடயம்.

முன்னால் ஆட்சியில் அவரின் செயற்பாடு இறுமாப்பு, செருக்கு, ஆணவத்தோடு அமைந்திருந்தது. அவரின் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை இனமாகிய தமிழ் பேசும் மக்கள் பட்ட வேதனையை இன்றும் மறக்கவில்லை.

இந்த நல்லாட்சியை கவிழ்த்து முன்னாள் ஜனாதிபதி மீண்டும் ஆட்சியை ஏற்படுத்துவாராக இருந்தால் சிறுபான்மை இனமாகிய தமிழ மக்கள் மத்தியில் தற்பொழுது மூச்சு விடக்கூடிய, எழுதக்கூடிய, பேசக்கூடிய போன்ற பல விடயங்கள் காவுகொள்ளப்படும் என்ற எதிர்வுகூறல் தமிழ் மக்கள் மத்தியில் எழுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (5)

## இந்து ஆலயங்கள்...

ளையாரை அகற்றிய இந் நபர்கள் அதனை அருகாமையிலுள்ள காணியொன்றுக்குள் வீசி விட்டு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வழமை போல் ஆலய பணிக்கும் வழிபாட்டுக்கும் சென்றிருந்த பெண்ணொருவர், இது தொடர்பாக நிர்வாகத்தினருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

மற்றுமோர் சம்பவத்தில் பத்தினி அம்மன் ஆலயம் மீதான தாக்குதலின் போது ஆலயத்தின் கோபுர கலசம் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களை பொறுத்தவரை தமது பகுதியில் இனங்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தும் பின்னணியில் நடைபெற்றிருக்கலாம் என அப்பகுதி மக்கள் கருதுகின்றனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக ஆலய நிர்வாகங்களினால் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த டிசம்பர் மாதம் 18ஆம் திகதியன்று மட்டக்களப்பில் நடைபெற்ற இது போன்ற சம்பவமொன்றின் போது வாகனேரி ஸ்ரீசத்தி விநாயகர் ஆலயமும் தாக்கப்பட்டு பிள்ளையார் சிலை தகர்க்கப்பட்டும் உடைக்கப்பட்டும் உடைமைகள் சேதமாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
ஆரம்பம்
(C-7078)
07-01-2017
சனி
8.00 மணி

யாழ்
REGISTER NOW!
(C-7058)
Java
Java Programming Classess with practicals
weekdays 9-11am 7-9 pm
weekends 9-12am 8-9.30 pm
0777861677

"புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு"
ஞானோதய அக்கடமி
(சங்கத்தானை, சாவகச்சேரி)
A/L 2019 A/L DAY CLASS
■கலை ■வர்த்தகம் ■தொழில்நுட்பம்
ஆரம்பம்:-08.01.2017
ஞாயிறு காலை 9.00 மணி அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
(7314) -நிர்வாகம்

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு
01.Cashier (Part Time & Full time)
02.Showroom Marketing Sales & Executives. (Boys) (Computer அனுபவமுள்ளவர்கள்)
03.Driver (Heavy Vehicle License)
விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
KINGS ELECTRONICS (PVT) LTD
No.12, Pointpedro Road, Jaffna.
T:P:- 021 454 6699
(சி-7064)

## ஜனாதிபதியின்...

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியராச்சி, முப்படைகளின் தளபதிகள், வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், தெல்லிப்பழை பிரதேச செயலகர் ஆகியோரும் கலந்துகொள்ளவிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

மேலும் வலி.வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட நிலையில் அவர்களுக்காக அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தினையும் ஜனாதிபதி பயனாளிகளிடம் கையளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அந்தவகையில் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 136 வீடுகளும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு -வளலாயில் 101 வீடுகளும் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளது எனவும் தொடர்ந்து பலாலி இராணுவ தலைமையகத்தில் இடம்பெறும் யாழ். மாவட்டத்தை சேர்ந்த இளைப்பாறிய இராணுவ வீரர்களை கௌரவிக்கும் நிகழ்விலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது.

இந்நிகழ்வை தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு நாட்டில் முதன்முதலாக தன்னுடைய நேரடிக் கண்காணிப்பில் வடமாகாணத்திற்கானதான குறைகேள் மையத்தினை யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்திற்குள் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஜனாதிபதி திறந்து வைக்கவுளளதுடன் அதனை தொடர்ந்து அங்கு இடம்பெறும் நிகழ்விலும் கலந்துகொண்டு பொது மக்களுக்கு உரையாற்றவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளை தொடர்ந்து இறுதி நிகழ்வாக மாலை 4.15 மணிக்கு யாழ்ப்பாணம் கோட்டையில் மரநடுகை நிகழ்விலும் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைக்கவுள்ளார் எனவும் அத்துடன் யாழ்ப்பாணத்திற்கான நிகழ்வுகள் அனைத்தும் நிறைவடைந்த நிலையில் மாலை 4.45மணிக்கு பலாலியில் இருந்து ஜனாதிபதி கொழும்பு நோக்கி புறப்படுவார் எனவும் நிகழ்ச்சி நிரல் இடப்பட்டிருந்தது.

அத்தோடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பலாலி வடக்கு அல்லது வட மாகாண ஆளுநர் அலுவலகம், ஆகிய இரு இடங்களில் இடம்பெறும் ஏதோவொரு நிகழ்வின் போது வலிவடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மக்களிடம் கையளிக்கப்படாதுள்ள காணிகளது மேலதிக விடுவிப்பு தொடர்பாக அறிவிக்கவுள்ளார் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே ஜனாதிபதியின் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் திடீரென இடை நிறுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலக ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இதேவேளை யாழ்.வருகின்ற ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட வேண்டும் என வடக்கு மாகாண உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் அண்மையில் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

## இருவரை தாக்கிய...

இரு இளைஞர் தரப்புக்கு இடையில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த சிறுபிரச்சினை கடந்த 25ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று, நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திற்கு அருகில் இரும்புக்கம்பி தாக்குதலில் முடிவடைந்தது. இச் சம்பவத்தில், நவாலி கிழக்கு பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தோபர் பிரனீத் (வயது 35) மற்றும் அதேபகுதியினை சேர்ந்த எஸ். வின்சன் (வயது 22) ஆகிய இருவரும் இரும்புக்கம்பி குத்துக்கு உள்ளான நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதில் பிரனீத் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். நால்வர் பொலிஸில் சரணடைந்துள்ளதை அடுத்து, அவர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (செ-11)

## காணாமல் போனோர்...

சியமளித்த ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சாணக்க குணவர்தன என்பவரே காணாமல் போனவர்கள் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்திருக்கின்றார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காணாமல் போயிருப்பது தொடர்பில் கந்தசாமி பொன்னம்மா இந்த ஆட்கொணர்வு மனு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

முன்னைய குறுக்கு விசாரணையொன்றின் போது, இராணுவத்தினரிடம் இறுதி யுத்தத்தின்போது சரணடைந்தவர்கள் பற்றிய விவரப்பதிவுப் பட்டியல் இராணுவத்தினரிடம் இருப்பதாகத் தெரிவித்திருந்த மேஜர் ஜெனரல் சாணக்க குணவர்தனவை அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

ஆயினும் ராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ள 11 ஆயிரம் பேர் கொண்ட பெயர்ப்பட்டியலையே அவர் சமர்ப்பித்திருந்தார்.

நீதிமன்றம் கோரியிருந்த ஆவணத்திற்குப் பதிலாக இந்த ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆட்சேபம் தெரிவித்திருந்த வழக்காளிகள் தரப்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்னவேல், 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவடைந்ததையடுத்து, இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் பற்றி கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நிலையிலேயே காணாமல் போனோர் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என குறித்த இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளனர்.

இதன்போது இந்த வழக்கு வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளரராக இருந்த எழிலன் என்றழைக்கப்படும் சின்னத்துரை சசிதரனின் மனைவி வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், கிருஸ்ணகுமார் ஜெயக்குமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமி காந்தி, கந்தசாமி பொன்னம்மா ஆகியோர் இந்த ஆட்கொணர்வு மனு வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

(மற்றுமொரு செய்தி உள்ளே)

## நல்லிணக்க...

ஏற்பட்டமைக்கு தமது கட்டுப்பாட்டை மீறிய சூழ்நிலைகளே காரணமாக அமைந்திருந்ததாக நல்லிணக்க பொறிமுறைச் செயலணி குறிப்பிடப்பட்டிருந்தது.

யுத்த குற்ற விசாரணை உள்ளிட்ட விடயங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை அறிவதற்காக அரசாங்கத்தினால், நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்தறியும் குழு நியமிக்கப்பட்டது.

கலாநிதி மனோரி முத்தேட்டுவேகம தலைமையிலான குழுவினர் நாடு முழுவதும் மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

இதன்போது கருத்து பதிவு செய்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்றும் பலமாக சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

DCM
ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
ஆரம்பம்
07-01-2017
சனி 3.00 P.M
(C-7077)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(சி-6390)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
100% SATISFACTION GUARANTEED
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L 2019
கலை
வர்த்தகம்
( தொழிநுட்பம் )
கணித விஞ்ஞானம்
ஆரம்பம்:-08-01-2017
ஞாயிறு 8 மணி
(சி-7071)

யாழ்.நகர் DCM யாழ்.நகர்
(சி-7077)
ஆரம்பம்
A/L 2019
07.01.2017
சனி 8.30AM
வர்த்தகப் பிரிவு
பொருளியல்
S.ஜெயக்குமார்
கணக்கீடு
S.தவா
வணிகக்கல்வி
V.முரளி
தமிழ்-K.சந்திரலிங்கம்
இந்து நாகரிகம்-T.சிறீஸ்
கிறிஸ்தவம்-T.தேவா
புவியியல்-S.தினேஸ்
அரசியல்-K.சுகாஸ்
வரலாறு-Y.பிரதீபன்
அளவையியல்-T.நீதன்
விவசாயம்-R.விக்கி
கலைப்பிரிவு
ஊடகம்-S.நவநீதன்
நாடகம்-R.றமேஸ்
ICT-S.சிவா
மனை.பொருளியல் -S.மஜீவன்
சித்திரம்-S.நிஷாந்தன்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.